KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

கலா நிலயம்

V.7. No. ௨௰. 17.5.1934.

M211,N22tN
N34.7.29
199170

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஆு மே மீ 17உ [No. 20

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 305
2. இரவீந்திரநாதர் கட்டுரைகள்-(ராஜாராம்மோகன் ராய்) W.E. அரியநாயகம். B.A; B.D; B.Ed & ஆஷாதேவி. M.A. 307
3. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 308
4. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 2 களம் 1.)
Goldsmith's—"She stoops to Conquer" 310
5. அப்பர் (64. கலை-இதிகாசம்-இராமன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L 312
6. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 6-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 313
7. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை (ப்ருந்தாவனலோல)
P. S. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 315
8. கம்பராமாயணம்—(நட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 316
9. மதுரைக்கோவை (உடன்போக் கொருப்படுத்தல்)
S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 318
10. வர்த்தமானம் 319

கலாநிலயம்

சுய கல்சர் 3.

தருமசிந்தனையின் தன்மையைச் சென்றநா ளியம்பி, அது, மாநட இயற்கையில் சுயமாகவே அமைந்துளவோர் அம்சமென்றும், மாநடர்க்கிருக்கும் சுய ஆராய்ச்சி என்னுஞ் சக்தியினால் அதனை வளர்த்துக் கொள்வது சுயகல்சரின் கிளைப்பயிற்சிகளில் ஒன்று ஆகுமாறும் வகுத்துரைத்தோம். இத் தருமசிந்தனையைப்போல் சுயகல்சரின் கிளைகளிலொன்றாய் வளர்வதற்கிருப்பது தெய்வசிந்தனையுமாம். இதன் தன்மை யாதெனச் சிறிது பார்ப்போம்.

சுயகல்சரின் இந்தத் தெய்வசிந்தனையென்னும் அம்சம் வளர்வதற்கும்,சுயவாராய்ச்சிச் சக்தியைத் துயிலவிடாமல் எழுப்பி எழுப்பி நமது உள்ளத்தைப் பன்முறை சோதித்துக்கொண்டிருக்கவேண்டியது மிகவும் அவசியம். அச்சக்தியைக்கொண்டு நம் உள்ளத்தைத் துருவுங்கால், ஐம்புல னறிவிற்கு எட்டவல்ல அளவிற் குட்பட்டதாய், ஓர்நிலை நிற்றல்இன்றி என்றென்றும் மாறிக்கொண்டிருக்கின்ற இப்புறவுலகத்தினோடு நம்மைத் தொடர்புபடுத்தி இயக்குகின்ற எண்ணங்களமைந்திருப்பதை உணர்வோம். அவ்வெண்ணங்கள் நிறைவேறுவதற்குரிய உதவியாய்ப் புற உலகத்தைக் காணவும் அறியவும் கண் முதலிய பொறிகளும்,அப்புறவுலகப் பொருள்களை நாம் கைக்கொண்டு நம்முடையதாக்கிவைக்க அவயவங்களும் இருப்பதும் தெரியவரும். புறத்துலகத் தொடர்புடைய அவ்வெண்ணங்களும் இவ்வவயவங்களும் நம்பாலிருப்பதைமாத்திரம் அறிவதல்லாமல்,இதற்கெல்லாம் வேறான மற்றோர் சக்தியும் நம்முளே நிகழ்வதற்கிருக்கின்றதென்பதும் சுய ஆராய்ச்சியின் பயனாய்ப் புலப்படும். அச்சக்தியானது, நாம் கண்டு கையாள்கின்ற பொருள்களோடு நின்றுவிட நினைத்திடாது; காலம் இடம் முதலிய எல்லை வரம்புகளுக்குள் அடங்கிக்கிடக்க நேர்ந்திடாது; எல்லையற்றதாய், தானே சிருஷ்டிக்கப்படாமல், எல்லாச்சிருஷ்டிகளுக்கும் காரணபூதமாயிருக்கின்றவொரு பொருளைத் தேடித்தேடி,நிரந்தரமாய் நிர்மலமாய் அறிவிற்கறிவாகி நிற்கின்ற அவ்வொன்றினை அடையுங்காறும் அமையாமல் முயல்கின்ற அருமையும் பெருமையும் வாய்ந்தது அது. தெய்வாம்சம் என்பது இதுவே. இதன் மகத்துவத்தை மாந்தர் தம் மொழிகொண்டு எத்துணைப்புகழினும் அதற்கும்மேல் அது பலபடி உயர்ந்ததாகையால், மிகைபட நவில்தல் என்பது இதன்பால் இயலாததொன்றாம். ஏனெனில் சுவை யொளியூறோசைநாற்றங்களால் மதித்துணரப்படுகின்ற இவ்வுலகத்தி லல்லாமல் வேறோர் உன்னதமாய உலகத்தில் ஊடாடுதற்கேற்ற குறிப்பையுடைய அச்சக்தியை உரையால் அளவிடுவதெங்ஙனம்! இடுவதற்கியலாத அளவைக் கடப்பதென்பது மில்லையே. இச்சக்தி நம்முள்ளே வளர்ப்பார் இன்றி வாடாமல், கிளர்ப்பார் இன்றித்துஞ்சாமல்,சுயவாராய்ச்சியினால் அதனை நடைமுதலில் பயின்றுவருமாறு புரியோமாயின் வேறு பற்பல புரிந்து நாம் என்செய்தோம். கடவுட்கருத்தைப்பொலிவுறப் பெருக்குகின்ற இச்சக்தியைப் போற்றிவளர்த்தல் சுயகல்சரின் முக்கியநோக்கமாகும். இதனால்,தெய்வத்தின் மெய்யுணர்வு நம்முள்ளத்தே அரும்பித்தெருண்ட தன்மையில் மலர்ந்து உலகெங்கும் கடவுள்மணம் கமழ்வதோர் கருத்தினராவோம்.

இத் தெய்வசிந்தனையும் தருமசிந்தனையும் ஒன்றோடொன்று ஊடாடித் துன்னித்திகழுந் தன்மையன. இவ்விரண்டும் ஒன்றினை ஒன்று சார்ந்தே வளருமேயல்லாமல், ஒன்றின்றி மற்றது ஓங்குமெனல் ஒண்ணாது. தருமசிந்தனையின் முதிர்ச்சியால் திரண்டு உதிக்குந் தோற்றமே தெய்வசிந்தனை என்றாலும், இவ்வுண்மையை உரைத்ததாகும். இந்த விரண்டு சிந்தனைகளும் ஒருவன்பால் நிகழும்போது அவன் தன்னுடைய இலாபநஷ்டங்களைக் கணக்கிடுவதில்லை. ஆதலின், சுயநயமில்லாது நிகழ்வதால் அவை யிரண்டும் ஒரு தன்மையன. எதனை நாம் உவகையோடு வியந்து ஆராதிக்கின்றோமோ அதுவே நாம் ஆமாறு புரிதல் மனத்தின் தொழில். நடுநிலை நீதியும், நிகிலப் பொருள்களனைத்தின்பால் நிலைத்த அன்பும் உடையதாய்த் திகழ்வது கடவுள், என்னுமவ் வுண்மையைக் கண்டு சாதிப்பதே எவ்வகைச் சமயநெறியின் சாரமும் ஆகும். 'அறவாழி அந்தணன்' என்று அவனை யழைப்பதில் இந்த இரண்டு தன்மைகளும் அடங்கியிருக்கின்றன. தருமம் அன்பு என்பன சுயநயச் சூழ்ச்சிக்கோ முற்றிலும் எதிரானவை. அறவாழியந்தணன் என்று அடையடுத்து விளங்குகின்ற கடவுளின் நிலையே நம் மனத்தில் தங்குமாறு, அதனிடத்து இயற்கையாய் அமைந்துள்ளதெய்வசிந்தனையை வளர்ப்போமாயின் அறமும் அன்பும் நம்உரிமைமாத்திர மாவதன்றி நம் உடைமையும் ஆகி, அவ்வுடைமை மிகுந்து எங்கும் பரத்தலினால் அதன் வடிவமே நாம் ஆவோம். இவ்வண்ணம், உரிமை உடைமையாய், உடைமை வடிவமாகின்ற தத்துவத்தைத் தன்னுட்கொண்டது தெய்வசிந்தனை என்னும் சக்தி. ஈட்டிய பொருளை இழந்துவிடுதற்கு எவரும் மனங்கொள்ளார். அப்பொருள் எதுவாயினும் அதனையே கைக்கொண்டு நம்மைவிட்டு அது அகலாவண்ணம் மற்றவைகளை எல்லாம் எளிதில்துறக்க இசைகின்றார் மாந்தர். பணத்தைத் தேடிப் புதைத்துளோன் ஒருவன், அது குறையாதிருக்கும் பொருட்டுக் கொடையனைய அறங்களையும் கிளையுறவும் கைவிடவேண்டி நேர்கின்றது. ஈட்டிய செல்வம் இருக்கவேண்டு மெனின் கண்ணோட்டம் கூடாது என்னுங் கருத்து அவனுள்ளே ஆழ்ந்துவிடுகின்றது. "தாக்ஷண்யம் தன நாசனம்" என்று, பொருளாதாய விதிகள் சில விளம்பித் தருக்குற்றுத் திரிதலே அவன் கடன். மூல தனம் முதலிய சாதனங்களைக் கொண்டு பணம் பெருகப்பெற்றவன், இவ்விதம் அதனைக் கைப்பற்றி மற்றெல்லாவற்றையெல்லாம் அகற்றிவிடுகின்றான். நால்வரிடைச் சென்று நடமாடும் பொருட்டு மனிதனது அகங்கார மமகாரங்கள் சிறிதும் பெரிதுமாய் எடுத்திருக்கும் வடிவங்களன்றோ இப்பணத்தின் வகைகள். தன்னைப் போற்றுதற்கே இப்பணம் ஈட்டப்பெற்றிருக்கின்றது என்னுங் கருத்து உடைய ஒருவன், பணத்தையே முதலாகவைத்து மற்றவைகளை அறவே அகற்றிவிடுகின்றான்என்பதும், தன்னையே முதலாக வைத்து மற்றவைகளை அகற்றிவிடுகின்றான் என்றுரைப்பதும் ஒன்றேயாம்.

பணத்தைச் சேர்த்தவன்செய்தி இதுவாக, மற்று எதனை ஈட்டினோர்தம் செய்தியும் முடிவின்முறையில் அன்னதே. பிறப்புரிமையாகிய தருமசிந்தனை தெய்வசிந்தனை என்னுமிவ் விரண்டையும், சுயவளர்ச்சி என்னுமவ் வியற்கைச்சாதனங்களால் வளர்த்துப்பெருக்கி, அறம் அன்பு என்னும்செல்வங்களை ஈட்டியவர்களும் அவைகளையே பற்றிநின்று, அவைகளுடன் முரண்படும் மற்றவைகளையெல்லாம் ஒருபொருளென மதியாமல் அகற்றிவிடுவர். ஈட்டியபொருளைஇழப்பதற்கு அஞ்சுவதா மவ்வொரு தன்மை இவர்களுக்கும் பொருந்தும். 'தாக்ஷண்யம் தனநாசனம்'என்றுதனத்தை முன்னிட்டுக் கண்ணோட்டத்தைச் சிதைப்பவர் அவராயின், இவர் "தனம் தாக்ஷண்ய நாசனம்" என அவ்வாசகத்தை மாற்றிக்கொண்டவராய், கண்ணோட்டத்தை முன்னிட்டுத் தனத்தையே தகவிலதென்று வெறுப்பார்.—('தனம்' என்னுமிச் சொல் பணத்தை மாத்திரமன்றி மனிதருடைய ஆசைக்கும் சுகத்திற்கும் இலக்காயிருக்கின்ற யாவற்றையும் பொதுவாகக் குறித்து நிற்கின்றது)—தருமம் தலைகாக்கும்என்னுங் கொள்கையும் அவர்களுக்குச் சிரிப்பே விளைக்கும். ஏனெனில், தருமத்தை ஈட்டுவதும் தம்பொருட்டே என்னும் சூழ்ச்சி அவ்வுரையில் அடங்கியிருக்கின்றதன்றோ! தருமத்தின் தலையைக்காக்கத் தம்தலையைக் கொடுப்பதே முறையென்ன முன்னணி நின்று முயல்வார் அவ்விழுமியோர். தருமத்தை அன்பினை ஈட்டியவர், அதற்கோர் சிதைவு நேராவண்ணம்வேறெதனையும் துறக்கலாவார். ஆடியது சூதேனும் வாய்மைத் தருமத்தின் நிமித்தம் உதிட்டிரன் நாட்டைவிட்டேகினான். கொடையறம்வளர்த்த நிடதநாடுடையவள்ளல், விண்ணவர் அவனைத் தமயந்தியின்பால் மணத்தூது தமக்காகப் போகென்றிரந்தபோது, என்செய்தான்! "மெய்த்தருமம் நன்றெனப் புன்னகைகோட்டினான்" என்றும், "பொய்மை தீதென்னும் தருமத்திற்கு" அஞ்சினனென்றும், தேவர் தன்னை வஞ்சித்துவைத்த இந்நஞ்சைக்கண்டு மிகக்கலங்கிப் பின்'சொன்னவை மறக்கிலன்' என்று துணிந்தானென்றும் அதிவீரராம பாண்டியன் உரைத்தானேனும், பாண்டியனின் பலபடி புலமைமிக்க புகழேந்தி "கோதையைத் தன்னுகத்தால் கோதாகவென்றானக்கோ" என அவன்தான் ஈட்டிய தருமத்தின் தலையைக் காத்தற்குச் சிறிதும்திகைக்காமல் பெயக்கண்ட நஞ்சை உண்டு அமைந்தபரிசு நமதகமுருகக் காட்டுகின்றார். தருமத்தின்பொருட்டு நளன் காதலியைக் கைவிட்டதுபோல், தயரதன் தன் மதலையை 'நெடுங்கானம் படரப்போகு' என்றான். தேர்க்காலில் தன்புதல்வனைக் கிடத்தினான் இன்னொருவேந்தன். இயற்பகை தன் மனைவியைக் கொடுத்து விட்டனன். பதி இழந்தானேனும் பாலனை யிழந்தானேனும் படைத்த நிதி யிழந்தானேனும், மாலையிட்ட தன் மனையாள் கழுத்தி லின்று வாளை யிடப் புகுவானேனும், ஈட்டிய தன் தருமத்தை 'இழக்கமாட்டேன்' என்று பற்றி நின்றான் அரிச்சந்திரன். கன்னன் செய்கையை என்னென்றுரைப்பது! தான் வளர்த்த தருமத்தைக் கைவிடாது காப்பதற்கு, அதன் பயனை புண்ணியமனைத்தையும் மறையனாய் வந்த தன் மைத்துனற்கு நல்கினான். தருமத்தையே துறந்தேனும் அத் தருமத்தைக் காத்த இக்கன்னன் செயலைக் கருதுங்கால் 'தன்னையுந் துறக்குந்தன்மை தருமத்தே தங்கிற்றன்றே' என்று கம்பரடி யொன்றைச் சிறிது மாற்றியமைக்குமாறு எம்மனம் தூண்டுகின்றது.

ஆதலாற்றான் தருமசிந்தனை, சுயநயநோக்கம் அற்றதென முன்னர்க் கூறினோம். பொன்னும்வெள்ளியும் தன்னுடைமையாகப்பெருக்கிக்கொண்டவன் அதனை

199170

இழக்க மனம்பொறாகையால், பொறைஈகை கிளையுறவு கண்ணோட்டம் ஆகிய தருமங்களையெல்லாம் அவன் போக்கிலேபோகவிட்டு விவகரிக்கவேண்டியது முறையேயாம். மற்று, அறச்செல்வமும் அதன்தொடர்புடைய கடவுட்செல்வமும் ஈட்டினவனும்அவைகளைஇழக்க மனம்பொறாகையால், அதன்பொருட்டுத் தன்னையேதுறக்குந் தனிப்பெருந்தகையவனாகின்றான். காரணகாரிய முறை இவ்விரண்டிற்கும்ஒன்றே. ஈட்டமுயல்வது எதுவெனும் நோக்கத்தைப்பற்றியே மாந்தர் மேன்மையும் தாழ்மையும் அடைகின்றனர். சுயகல்சர், உயர்ந்த நோக்கத்தின்பால் உய்க்கும் தன்மையது. மற்றுப் புறப்பொருள்களைத் திறமையுடன் கையாண்டு பயன்படுத்திக்கொள்ளப் பயிற்றுவிக்கும் எல்லாச் சாத்திரங்களும் சாதனங்களும் மாந்தரினத்தைத் தாழ்மையின்பாலே பிடர்பிடித்து உந்திச்செல்கின்றனவென்பதற்கு ஐயங்கொள்ள இடமில்லையே. இப்படி உலகெங்கும் ஐயமிலாவகை தருமத்தோடு தெய்வத்தோடு இணைந்து இயங்குதற்கியன்ற சிந்தனைகள் எவ்வெவர் உள்ளத்திலேயும் இயற்கையா யிருக்கச் சுயஆராய்ச்சியால் அவைகளைவளர்த்துக்கொள்ள வேண்டுமென்றுமுயலாது—அச்சுயஆராய்ச்சிச்சக்தியொன்று நம்மிடத்தில் இருக்கின்றதென்பதைக்கூட மறந்து—பற்பல வகைகளில் புறவுலகத்தையும் அதன்கண் உள்ள சக்திகளையும்பற்றி ஆராய்ந்து ஆராய்ந்து, கடல்மீது ஆணைசெல்லவும் காயகல்பந் தேடியும் இரஸவாதவித்தைக்கு அலைந்தும், நான்நான் எனத் தருக்கியே ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிக் குழம்புவோர் மதியையும் வினையையும்என்னென்றுசொல்லி வியப்பதென அறிகிலேம். திமிங்கலத்தால் விழுங்கப் பட்டோன் ஒருவன் அவ்விலங்கின் குடலமைப்பை ஆராய்வதுபோலாம் இன்னவர் செய்யும் ஆராய்ச்சி எல்லாம். தீயை மிதித்தவன் குதிப்பதைக் களிநடம் புரிதலெனக் கொள்வதுபோலாம், இவர்கள் களிப்பதுபோல் தோன்றுகின்ற தோற்றங்களெல்லாம். இந்நிலையை ஷெல்லியென்னும் ஆங்கிலப்புலவர் "This mad unrest which men miscall delight" என்று நன்குகூறினார். மதக்களிற்றால் தூக்கிஎறியப் பட்டோன் அடையும் முன்னேற்றமே இப்புறவுலக வாழ்க்கையில் வாய்க்கும் முன்னேற்றங்களெல்லாம்.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

ராஜா ராம்மோஹன் ராய்

[299-வது பக்கத் தொடர்ச்சி]

இத்தகைய போராட்டங்களின் இடையே, பாரத நாட்டின் நித்தியமான சத்தியவார்த்தையை நிலைநிறுத்தி வெற்றியடையும்பொருட்டு உபதேசங்கள் செய்யக் காலாகாலங்களில் மகாபுருடர்கள் தோன்றியிருக்கின்றனர். இவ்வாறு இந்நாள் தோன்றினவர்களில் முதன்மையானவர் ராஜா ராம் மோகன் ராய். இதன் முன்னேயும், அறியாமை யென்னுமொரு அந்தகாரத்தினுள் இடைக்கிடை ஒற்றுமை ஒற்றுமை என்னும் மொழி இயம்பப்பெற்றுளது. முற்காலத்தில், வைகறைப்பொழுதில் அலைப்புண்ட பறவைகள் சில விழிப்படைந்து இம்மையாகிய கூட்டின் கதவைத்திறந்து வெளிவந்து, தம் சமூககாரியங்களினால்அடர்ந்த உலகத்தைக்கடந்து ஆகாயத்தின்கண் உயர்ந்து, அங்குக் கண்ட ஒளியை வரவேற்று வாழ்த்திப் பாட்டுக்களைப் பாடின. அன்னவர், முக்தியடைந்த ஜீவனின்மொழிகளைக் கொணர்ந்தனர். அவர்களே, "விராத்தியஸ்துவம் பிராண" (சாதி தருமத்தைக் கடந்தவர்) என்று வியக்கப்படுகின்றவர். ஜீவனே, நீ விராத்தியன், இம்மை ஸம்ஸ்காரங்களில் நீ சிக்குண்டவன் அல்லன். தாவரம் போன்று அசைவற்றவன் அல்லன்.

இத்தகைய விடுதலையை விளம்ப வந்த தூதர்களில் ஒருவரே கபீர். அவர் தன்னைப் பாரததேசத்து யாத்திரிகனில் ஒருவனென்றே அழைத்துக்கொண்டார். வேற்றுமைகளாகிய குப்பைகளுக்கும் தூறுகளுக்கும் காடுகளுக்கும் இடையே துருவி இப் பாரதப் பாதையைக் கண்டுபிடித்தவர்களில் மற்றொருவர் தாது என்பவர். (இப்பெரியவர்கள் பேசுகின்ற ஒற்றுமைக்கும், அரசியல் வாதங்களில் சிற்சிலவற்றிற்கு ஒருஉபாயமாகவே வற்புறுத்தப்படுகின்ற ஒற்றுமைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை). இப்பாரத யாத்திரிகர் இயம்பிய இவ்வொரு வொற்றுமையோ, மனுஷத்வத்தின் சாதனை. வேறுபாடுகளை விளைவிக்கும் புத்தியின் அகங்காரத்தினின்று விடுவித்து முத்தியை அளிக்கும் சாதனை இது. அரசியல் துறைகளில் பிரயோஜனப்படுகின்றவோர் உபாயம் அன்று இவர்கள் கூறும் அவ்வுண்மை ஒற்றுமை. ஒற்றுமையிற் சேர்க்கும் இப்பாதையே இப் பாரதநாட்டிற்குச் சிறப்புடைய உரிமை வாய்ந்த பாதையாம். புதிய இத்தற்காலத்தில் இப்பாதை யாத்திரிகர் ராஜா ராம் மோகன்ராய். அவர் அதன்பிரயோஜனத்தைக் கருதியன்று ஒற்றுமையைப் பாராட்டினார். மானுட இனத்தின் ஆன்மாவினது ஆழத்திலுள்ள ஒற்றுமைத் தர்மத்தின் நித்தியமான காட்சியை எய்தும்படி, பாரதநாட்டுச் சரித்திரத்தில் நற்புத்தியின்மூலமாக ஒற்றுமையடைந்த மனிதத்தொகுதியின் ஓர் மகிமை வாய்ந்த வடிவத்தைத் தன் உள்ளத்தில் காண்பவராயினார். உதாரமுடன் அகன்ற பாரத நாட்டின் இப்பாதையில் வருமாறு அனைவரையும் அழைத்தார். அப்பாதையில், இந்துக்களும் கிறிஸ்தியர்களும் முசல்மன்களும் யாதும் வேற்றுமையின்றிக் கலக்கக்கூடும். அவ்வாறு இப்பாரதநாட்டின் பாதை அகன்றதா யில்லாவிட்டாலும், அல்லது வேறு வேறு ஆயிரம் வகைகளாகப் பிரிக்கின்ற ஆசார அனுஷ்டானங்களாகிய முள்வேலிகளால் அடைக்கப்பட்டிருப்பதே இப்பாரதநாட்டின் நிரந்தரமான இயற்கையா யிருக்குமேயானாலும், நாம் உய்வதற்கு ஒரு உபாயமும் இல்லாததாகிவிடும்.

இந்தத் தேசசரித்திரத்தில் இவர்களுடைய ஒற்றுமை சாதிக்கப்படவில்லையானால், ஒற்றுமை சாதிக்கக்கூடியதொன்று என்பதை வேறு எப்படித்தான் மெய்ப்பிக்க இயலும்? குவிந்து குவிந்து கல்லைப்போல் இறுகி மிகப்பெரியதோர் கட்டியாக்கி மற்ற மதத்தினர்களை வெளியிலேயே மறித்தடைத்து வைப்பதுதான் நம்முடைய தருமமாயின், இத்தொகுதிகளின் வேற்றுமை நினைவினால் விளைந்த உறவினது ஈனத்தின் பெரிய பாரத்தை யார்தான் தாங்கமுடியும்.

இவ்வண்ணம் சிறு சிறு பிரிவுகளாக ஒதுக்கிவைக்

கப்பட்டிருக்கிற மனிதர்கள் தளர்ச்சியடைந்து விழுந்து கிடப்பதை நாம் காணவில்லையா? ஜன சமூகத்தினடிப்படையிலேயே பற்பலவகைப் பிளவுகள் செய்யப்படவில்லையா? உறவினர்களே அன்னியர்களாவதால் ஏற்படும் பாரமானது பொறுக்கக்கூடாததா யிருக்கின்றதென்பதை நாம் கண்டுகொள்ளவில்லையா? யாரை நாம் அன்பில்லாமல் நடத்துகிறேமோ, யாரை ஒன்றற்கும் உதவாதவர்கள் என்று அலக்ஷியம்செய்கின்றேமோ, யாரைநாம் தீண்டுகின்றதுமில்லையோ, அவர்கள் நமக்கு வசப்பட்டிருப்பதென்பது ஒருபோதும் இயலாது. உறவினர்களையே அன்னியராகப் போக்கிவிடும் வழியையே நாம் பகிரங்கமாகத் திறந்துவைத்திருக்கிறேம். ஆனாலோ, அவ்வழியாகவே சனியனின் பரிவாரத்தினர்களாகிய கள்வர்கள் அனைவரும் இத்தேசத்திற்குள் பிரவேசித்தவண்ணமாகவே இருக்கின்றனர். நம்தேசமென்னும் இப்பெரிய கப்பலின் பலகைகளை இடைவெளிவிட்டு அமைப்பதே இப்பாரதநாட்டின் நிரந்தரமான தருமமென்றுகருதுவோமாயின், வெளியிலிருக்கும் அலைகளை நம் பகைவர்களென்று வீணே புலம்பிக்கொண்டிருப்பதேன்! கப்பலின்பலகைகளுக்கிடையே வெளிகள் இருக்கும்படி செய்வதே கருமம் ஆயின், நாசமுடைய உப்புக்கடலில் அழிந்துபோவதே பாரதநாட்டின் தலையாய இலக்ஷியமென்று கவலையற்றுக் கிடப்பதே சிரேஷ்டம். மிகப் பழைய ஓட்டைகள் நிறைந்த கப்பலுக்குள் புகும் ஜலத்தை சிறு பட்டைகளால் அள்ளியள்ளி ஊற்றிக்கொண்டு எத்தனை நாட்கள்தான் யாத்திரை செய்யக்கூடும்.

நம் தற்கால சரித்திரத்தின் ஆரம்பத்திலேயே ராஜா ராம்மோகன் ராய் தோன்றினர். இக்காலத்தின் தன்மையை இந்தியர்களாயினும் அயல்தேயத்தவர்களாயினும் ஒருவரேனும் தெளிவாக உணர்ந்துகொள்ளவில்லை. அவரோ, இக்காலமானது மிகப் பெரிய ஒற்றுமைக்கே மனிதர்களை இனிது அழைக்கின்றது என்பதை உணர்ந்தனர். ஞான ஒளியினால் பிரகாசித்துக்கொண்டிருந்த தன் உதாரமுடைய இதயத்தின்கண், இந்துக்களும் கிறிஸ்தவர்களும் முசல்மன்களும் தங்குவதற்கமைந்த இடத்தில் யாதும் வேற்றுமையில்லையென்று காட்டினர். அந்த இதயம் பாரதநாட்டின் இதயம். பாரத நாட்டின் உண்மையான குணத்தைத் தன்னுள்ளே விளக்கிக் காட்டினர்.

மனிதரின் ஒற்றுமை மொழியை ராஜா ராம்மோகன்ராய் ஒருகாலத்தில் இப்பாரதநாட்டின் வாக்கின் வழியாகப் பிரபலமாக்கினர். ஆனாலோ, அவர் நாட்டினர்கள் அவர்பால் குற்றமே கண்டனர். பலவகை இடையூறுகளுக் கிடையேயும் அவர் எழுந்துநின்று, இந்துக்கள் கிறிஸ்தியர்கள் முசல்மன்கள், இன்னும் மற்ற மதத்தினர் யாவரையும் பாரதநாட்டின் அதிதிசாலையில் ஒரேபந்தியி லுட்காரும்வண்ணம் அழைத்தார்.

யஸ்து ஸர்வாணி பூதானி ஆத்மந் நேவாநு பஷ்யதி
ஸர்வ பூதேஷு சாத்மாநம் ததோந விஜுகுப் ஸதே.

(தனக்குள்ளே சகல ஜீவராசிகளையும், தன்னைச் சகல ஜீவராசிகளுக்குள்ளேயும் எவன் காண்கின்றானே அவன், அதன்பின் எதனிடத்திலும் அருவருப்படையமாட்டான்.) அன்றோ. இந்நாள், தம் சமய வேற்றுமைச் சிறுமைகள் காரணமாக ராஜா ராம்மோகன்ராயை ஏற்றுக்கொள்ளாதவர் அநேகர் இருக்கின்றனர். ஆயினும், சாச்வதமாகிய இந்தியாவானது அவரைத் தன் இதயத்தினுள்ளே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அவர்தாம் காலம்சென்று நூறுவருடங்கள் ஆகின்றன. ஆயினும், தற்காலம் அவருடைய பிரபாவம் நம்மிடையே தங்கியிருந்து ஓர் புதிய யுகத்தைச் சிருஷ்டிசெய்ய உதவி செய்கின்றது. இன்றைக்கும் ஒலியற்ற அவர் குரலானது, இந்தப் பிரார்த்தனையைச் செய்தவண்ணமா யிருக்கிறது:—

யஏகோ வர்ணோ பஹுதா ஷக்தியோகாத்
வர்ணன் அநேகான் நிஹிதார்த்தோ ததாதி
விசைதி சாந்தே விஷ்வமாதௌ ஸதேவ:
ஸநோ புத்யா ஷுபயா ஸம்யுநக்து.

[ஒருவனும் உருவமில்லாதவனும் ஆகிய அவன் தன் பல்வகைச் சக்திகளால், தானே யனைத்துமாய் எல்லா வருணங்களையும் தாங்குகின்றான். இவனே ஆதியில் பிரபஞ்சம் அனைத்துமாய்ப் பரவி அந்தத்தில் அனைத்தையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்கிறான். அன்னவன், நம்மை நற்புத்தியோடு சேர்த்துவைப்பானாக.]

முற்றிற்று.

தமிழ்ப்பாடம் 120.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[297-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

ஈ இருக்குமிடமும் பாண்டவர்களுக்குத் தரமுடியாதென்று துரியோதனன் கூறிவிடவே கண்ணபிரான் அவையை விட்டு நீங்கிப்போயினன்.

வன்பி னலவனி வெளவ வென்றுகொ
லென்மனையி லுண்டியை மறுத்தவன்
றன்ப தாகினியொ டினிதருந் தும்வகை
தன்னி லின்னமு தியற்றினு
னென்பி தாவொடு பிறந்து மின்றளவு
மென்கை யோதன மருந்தியு
மன்பு தானுடை யனல்ல னென்பகை
தனக்கு முற்றபகை யல்லவோ. 58.

கண்ணன் அகன்றபின் துரியோதனன் சினத்துடன் விதுரனை நோக்கி விளம்புவான்.

பதவுரை.

என் பிதா ஒடு - எனது தகப்பனாரோடு, பிறந்தும் - பிறந்தவனாயிருந்தும், இன்று அளவு - இன்றுவரை, என் கை ஓதனம் - என்னுடைய சோற்றை, அருந்தியும் - உண்டவனாயிருந்தும், (விதுரன்) வன்பினால் - வலிமையினால், அவனி-இராஜ்யத்தை, வெளவ-கைப்பற்ற, என்றுகொல்-வேண்டும்என்றோ; என் மனை இல்-என் வீட்டில், உண்டியை - உணவுகொள்ள, மறுத்தவன் - மறுத்தவனாகிய கிருஷ்ணனை, தன் பதாகினி ஒடு - அவனது பரிவாரங்களோடு, இனிது அருந்தும் வகை - நன்கு சாப்பிடும்படி; தன் இல்-தன் வீட்டில், இன் - இனிமையான, அமுது-ஆகாரம், இயற்றினன்-அளித்து உபசரித்தான்;

(ஆகவே விதுரன்) அன்பு தான் உடையன்—என்

னிடத்தில் அன்பு உடையவன், அல்லன் - அல்லாதவன்.

(அன்பு இருக்குமானால்) என் பகை - எனது பகைவன், தனக்கும் - தனக்கும், உற்ற பகை - ஏற்பட்ட பகைவனாக, அல்லவோ - கருதப்படமாட்டானோ.

விரிவுரை:- துரியோதனனது சீற்றம் இப்பொழுது விதுரன்மீது பாய்கின்றது "எனக்குப் பகைவனென நின்ற கண்ணனை நீ வரவழைத்து உபசரிக்கலாமோ; பகைவருடன் கலந்துகொண்டு என் அரசைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்பது உனது கருத்தோ. என்சோற்றைத் தின்ற நன்றியுனக்கில்லையே. என்பிதாவொடு பிறந்தவனோ இத்துரோகம் செய்வது" என்று ஏசுவதில் அடங்கிய அற்பத்தனம் துரியோதனனது குணத்திற்கு ஏற்றதே. நன்னெறி பிறழ்ந்தவர் ஒருவரையும் நம்பமாட்டார்.

முதல்வி ழைந்தொரு வனுட னியைந்த
பொருள்பற்றி யின்புற முயங்கினு
மதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி
னவனையே யொழிய வறிவரோ
பொதும டந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர் புதல்வனும்
விதுர னின்றவ னொடுறவு கொண்டதோர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே. 59.

பொருளையே விழையும் வேசியர் மகனான விதுரன் வேறு என்செய்யான் என்று துரியோதனன் ஏசுகின்றான்.

பதவுரை.

முதல் - முதலிலே, இயைந்த - தான் கவரக்கூடிய, பொருள்- பொருள்களைஎல்லாம், விழைந்து- ஆசைப்பட்டு, பற்றி-அவைகளைப்பறித்துக்கொண்டு, ஒருவனுடன்- ஒருவனோடு, இன்பம் உற- இன்பம் ஏற்படுமாறு, முயங்கினும்- சேர்ந்தாலும், வேறு ஒருவன் - மற்றொருவன், அதிகம் என்ற - (முன்னவனது பொருளைவிட) அதிகம் என்று சொல்லக்கூடிய, பொருள் - பொருளை, தரின் - தருவானானால், அவனையே ஒழிய - அவனைத்தவிர வேறு எவனையும், அறிவரோ- அறிவாரோ (அறியமாட்டார்)

மண்ணில் - இப் பூவுலகத்தில், இது - இச்செயல், பொதுமடந்தையர் தமக்கு - பொதுமகளிர்களாகிய வேசியர்க்கு, புதுமை அல்ல- புதுமையானது அன்று.

அவர் - அத்தகையவர்க்குப் பிறந்த, புதல்வனும் - பிள்ளையாகிய, விதுரன் - விதுரன், இன்று - இன்று, அவனொடு - கிருஷ்ணனோடு, உறவுகொண்டது ஓர் - உறவுகொண்டதான ஒரு செயலின், வியப்பை - விந்தையை, என் சொலி - என்ன சொல்லி, வெறுப்பது - வெறுத்துரைப்பேன்.

விரிவுரை:—அநீதியாய் ஒருவனை வையப் புகுகின்ற துஷ்டர்கள் பொய்யாகக் கூடச் சில குற்றங்களைக் கற்பனை செய்துகொண்டு பழிக்கத் தலைப்படுவார். விதுரனது பிறப்பைப்பற்றி முன்னே (7-வது வால்யூம் 20 பக்கத்தில்) கூறியிருக்கின்றோம். வேதவியாசருக்கும், அம்பாலிகையின் தாசிக்கும் பிறந்தவர் இவ் விதுரர். இங்குத் தாசி என்னுமிச் சொல் 'ஏவல் செய்பவள்' என்ற பொருள் உடையதேயன்றிப், 'பரத்தை' என்ற பொருள் இல்லை. இது வெளிப்படை. துரியோதனனும் அதனை அறிவான். ஆயினும், தாசி என்பதும் வேசி என்பதும் வேற்றுமையின்றி ஒருபொருள்படப் பேசுகின்ற வழக்கை நினைவிற்கொண்டு துரியோதனன், தாசியின் மகனாகிய விதுரனை 'வேசி மகன்' என வாய் கூசாமல் நிந்திக்கின்றான். பெரியோரைப் பழிக்க அஞ்சார் பாவியர்கள். தன் பிதாவொடு பிறந்த ஒருவனை இவ்வண்ணம் தூற்றப் பொய்யிலே தோய்ந்த நாக்கே துணியும்.

இன்ன வாறிவ னுரைத்த போதவ
னெழுந்தி ருந்துவசை யென்னைநீ
சொன்னவாய் குருதி சோர வாள்கொடு
துளைத்துநின் முடிதுணிப் பன்யான்
மன்ன வாகுரு குலத்திலே யொருவன்
மைந்த னருயிரை வெளவினா
னென்ன வானவர் நகைப்பரே யெனை
யுரைத்த நாவுட னிருத்தியோ. 60.

அவ்வசைக்கு ஆற்றாதவிதுரன் சினந்துரைக்கின்றான்.

பதவுரை.

இன்னவாறு-இன்னபடி, இவன் உரைத்தபோது- துரியோதனன் வைது உரைத்தபோது, அவன் எழுந்திருந்து - விதுரன் எழுந்திருந்து, யென்னை நீ - என்னை நீ, வசை சொன்ன - வசை கூறின, வாய் - வாய், குருதி சோர - இரத்தம் பெருக, வாள்கொடு - வாள் கொண்டு, துளைத்து - குடைந்து, நின்முடி - உன் தலையையும், யான் துணிப்பன் - நான் வெட்டுவேன்.

மன்னவா - அரசனே, குருகுலத்திலே - குருகுலத்திலே, மைந்தன் - மகனது, ஆர் உயிரை - அருமையான உயிரை, ஒருவன் வெளவினன்-ஒருவன் கவர்ந்தான், என்ன - என்று, வானவர் - தேவர்கள், நகைப்பரே - நகைப்பார்களே (என்பதை எண்ணியே சும்மாவிருக்கின்றேன்)

(இல்லையேல்) எனை உரைத்த-என்னை இப்படி ஏசிய, நாவுடன் - நாவோடு, இருத்தியோ - இன்னும் இருப்பாயோ. (என்று கூறினன்)

விரிவுரை:—"மன்னவன் என்றஇறுமாப்பினலோ இவ்வளவு நீ என்னை ஏசத் துணிந்தனை; இவ்வுரை வந்த அவ்வாயிலிருந்து இரத்தமும் வரக்கண்டு பிறகு உன் தலையையும் வெட்டவேண்டுமெனில் எனக்கது இயலாதோ. செய்தாலும் யான் தக்கதே செய்தேன் என்று இப்பூவுலகத்தவர் அனைவரும் பாராட்டுவாரேயல்லாமல் என்பால் ஒருவரும் எக்குறையுங் காணார். பிறர்வசை பொறுக்காமை க்ஷத்திரிய தர்மமேயாகும் எனினும், 'கடுஞ்சொல் சில மதியிலாத் துரியோதனன் கழறினன்றான் என்! மைந்தனென்றும் பாராது, பிறர் பிழை பொறுத்திடும் பெருமையையும் நோக்காமல், தத்துவத் தூய்மையோன் என்ற பேருடைய இவ்விதுரன் கொன்றேயோ கடிவது; குருகுலத்தினழகு இதுவேயோ" எனத் தேவர்கள் நகைப்பினும் நகைக்கலாம் என்னுமோர் நினைவினலன்றோ உன் சிரத்தைத் தரையில் உருட்டா திருக்கின்றேன்" என்னும் பொருளது இச் செய்யுள்.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 2. களம். 1

[295-வது பக்கத்தொடர்ச்சி]

[டோனியும் நெவில்லியும் முன்னே பேசிக்கொண்டுவருகின்றனர். அவர்களுக்குப்பின் ஹேஸ்ட்டிங்ஸும் டோரதியும் வருகின்றனர்]

டோனி:—என்னை எதற்காகத் தொத்திக்கொண்டு திரிகிறாய், நெவில்லி. இப்படி என்னை வசியப்படுத்தப் பார்ப்பதற்கு வெட்கமாகத் தான் இல்லையா உனக்கு.

நேவில்லி:—ஒருத்தி தன் உறவினனுடன் பேசப்படாதா! அதிலென்ன குற்றம்?

டோனி:—ஆம், ஆம்; என்னை நீ என்ன உறவினன் ஆக்கிக்கொள்ளவேண்டுமென்று பார்க்கிறாய் என்பது தெரியாதோ எனக்கு. அதெல்லாம் முடியாது. சொல்கிறேன் கேள், அதுவெல்லாம் முடியாது, அவ்வளவுதான். ஆகையால் சற்றே நீ தூரத்திலேயே இரு. உன்னோடெனக்கு உறவொன்றும் நெருங்கவேண்டாம்.

[டோனி ஒருபக்கம் போகிறான், நெவில்லியும் விளையாட்டாகச் சிரித்துக்கொண்டே அவன்பின் செல்கிறாள்.]

டோரதி:—நீங்கள் மிகவும் சுவாரஸ்யமாகப் பேசுகின்றீர். லண்டனைப்பற்றியும் அந் நகரத்தின் நடையுடை பாவனைகளைப் பற்றியும் பேசுவதைவிட எனக்கு ஆசையானது இவ்வுலகத்தில் வேறொன்று மில்லை. ஆனால், நானோ லண்டன் நகரத்திற்கு ஒருநாளும் போனதில்லை.

ஹேஸ்ட்:—ஒருபோதும்போனதில்லையா! ஆச்சரியமாக இருக்கின்றதே! உங்கள் நடையுடை பாவனைகளிலிருந்து நீங்கள் அந்நகரத்திலேயே பிறந்து வளர்ந்தவர் என்றல்லவோ எண்ணினேன்.

டோரதி:—ஓ, என்னுடைய திருப்திக்காக அப்படிச் சொல்லுகின்றீர். நாட்டுப்புறத்து ஜனங்கள் எங்களுக்கு என்ன பாவனை இருக்கக்கூடும். நகர வாழ்க்கையில் எனக்கு அதிகஆசை. அந்தஆசைதான் என்னைச் சிறிது, இந்தச் சுற்றுப்புறத்திலிருப்பவர்களைக் காட்டிலும் உயர்த்திவைக்க உதவுகின்றது. ஆயினும், லண்டன் நகரத்திலுள்ள காட்சிகளையெல்லாம் கண்டு அங்குள்ள பெரிய மனிதர்களோடு பழகாதவர்களுக்கெப்படி நல்ல நடையுடை பாவனைகள் அமையும்? நான் செய்யக்கூடியதெல்லாம் லண்டனை இரண்டாம் கையாய் அனுபவிப்பதே. இருந்தாலும், அந்நகரத்து வம்புகளை யெல்லாம், அதற்கென்றே பிரசுரமாகும் பத்திரிகைகளிலிருந்து தெரிந்துகொள்ளாமல் விடுவதில்லை அவ்வப்போது மாறுகின்ற உடைகளைப்பற்றியும் அலங்காரங்களைப் பற்றியும் என் நண்பர் எழுதுகிறார்கள் ஐயா நான் என் தலையை வாரி முடித்திருக்கும் விதத்தைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்?

ஹேஸ்ட்:—நிரம்ப நாஸூக்காக இருக்கிறது. எங்கே கற்றுக்கொண்டீர் இதனை?

டோரதி:-ஒரு பத்திரிகையில் வரும் மாதர்பகுதியிலிருந்து.—

ஹேஸ்ட்:—இப்படி வாரிக்கொண்டு ஒரு நாடகத்திற்குச் சென்றால் அங்கு இருப்பவர் கண்களெல்லாம் உங்கள் தலைமேலேதான் கிடக்கும்.

டோரதி:—இப்பொழுது ஒருத்தியும் தன்னைவிகாரமாக வைத்துக்கொள்வதில்லை. ஆகையினால், சிறிது சிறப்பாகவே அலங்காரம்செய்துகொள்ளாவிட்டால், ஒருவர்கண்ணுக்கும் இலக்காகாமல் கும்பலோடு கும்பலா யிருந்துவிட நேரிடும்.

ஹேஸ்ட்:—ஆனால் அம்மா, நீங்கள் எந்த ஆடை அணிந்திருந்தாலும், உங்கள் விஷயத்தில் மாத்திரம் அப்படி நேரிடாது.

டோரதி:—என்பக்கத்தில் அந்தப் பழையபிண்டம் ஹார்ட்காஸல் இருக்கின்ற வரையில் நான்எவ்வளவு அலங்காரஞ் செய்துகொண்டுதான் என்ன பயன்? சொல்லிச்சொல்லி எத்தனைதான் வற்புறுத்தினாலும் அவரது சட்டையின் ஒரு பொத்தானைக்கூட மாற்ற முடியவில்லை. அது கிடக்கட்டும். பட்டினத்து நடைமுதலில் இப்பொழுது சிறப்பாகக் கருதப்படுகின்ற வயது எது?

ஹேஸ்ட்:—சிறிது காலத்திற்குமுன் நாற்பதுதான் எங்கும் நடைமுதலி லிருந்தது. அடுத்த வருஷம் ஐம்பதுவயதை நடைமுதலிற்குக் கொண்டுவர மாதர்கள் கருதியிருக்கின்றார்களென்று நினைக்கின்றேன்.

டோரதி:—நிச்சயமாகவா? அப்படியானால், நான் நடைமுதலுக்கு வர வயது போதாதே!

ஹேஸ்ட்:—நாற்பது வயது கடக்கின்ற வரையில் பட்டினத்தில் இப்பொழுது மாதர்கள்ஆபரணங்கள் அணிந்துகொள்ள ஆரம்பிப்பதில்லை. உதாரணமாக, நெவில்லியை அங்குப் பச்சைக் குழந்தை யென்றே கருதுவார்கள்.

டோரதி:—அப்படியிருக்க, அவளோ தன்னை மிகப் பெரியவளாக மதித்துக்கொண்டு, நகைகள் போட்டுக்கொள்ள எங்களை எல்லாம்விட அதிக ஆசைப்படுகிறாள். என் தமையன்மகள் அவள்.

ஹேஸ்ட்:—உங்கள் தமையன் மகளா அவள்? பக்கத்திலிருக்கும் இளைஞர் அவர் உங்கள் தம்பி என்று எண்ணுகின்றேன்.

டோரதி:—இல்லை, ஐயா, என் மகன். அவர்கள் இருவருக்கும் கலியாணமாகப்போகிறது. அவர்கள் விளையாட்டைப் பாருங்கள். முன்னரே புருஷனும் மனைவியும் ஆய்விட்டவர்போல், நாளுக்குப் பத்துத்தரம் சண்டைபோட்டுக்கொள்கிறார்கள், பத்துத்தரம் கூடிக்கொள்கிறார்கள் [அவர்களைப்பார்த்து] நல்லது, குழந்தாய், டோனி, நெவில்லிக்கு நீ இப்பொழுது என்னவென்ன மென்மொழிகள் சொல்லிக்கொண்டிருந்தாய்?

டோனி:—நான் மென்மொழி யொன்றும் சொல்லவில்லை. விடாமல் இப்படி என்னைத் தொடர்வதைப் பொறுப்பது மிகக் கடினம் என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தேன். அடேயடே! நான் என்பாட்டில் கிடக்க இவ்வீட்டிலே குதிரைலாயந் தவிர, எனக்கென்று ஒரு இடம் இல்லாமற் போய்விட்டதே.

டோரதி:—நெவில்லி, என் கண்ணே, இதனை யொன்றும் பொருட் படுத்தாதே. நீ எதிரே இல்லாதபோது அவன் சொல்லும் கதை வேறு.

டோனி:—அத்தனையும் நாசமாய்ப்போன வெறும் பொய்.

டோரதி:—ஆகா! கெட்டிக்காரனாயிற்றே இவன். ஏன் ஐயா, இவர்க ளிருவருக்கும் வாயண்டை ஒரே ஜாடை யல்லவா? ஒரே உயரமுங் கூட. என் கண்களா. பக்கத்தில் பக்கத்தில் வந்து நில்லுங்கள் பார்ப்போம். டோனி, வா.

டோனி:-என்னிடத்தில் இந்த வம்பெல்லாம் வைத்துக்கொள்ளாதே.

[உயரம் பார்க்க வருபவன்போல் வந்து நெவில்லியின் தலையோடு முட்டிக்கொள்கிறான்]

நேவில்லி:—அடே தெய்வமே! என் தலை யுடைந்ததே.

டோரதி:—அட இராக்ஷஸா! வெட்கந்தானில்லையா உனக்கு, டோனி. நீ ஒரு புருஷனாக இருந்தும் இப்படி நடக்கிறாயே.

டோனி:—நான் புருஷனானால், என் ஆஸ்தியை என் கையில் கொடுத்துவிடு. அடேயடே. இனிமேல் என்னை இப்படி மடையனாக்க இடங்கொடுக்கமாட்டேன்.

டோரதி:-அடே நன்றிகெட்டபயலே, அடேபாவி, உனக்காக நான் பட்ட கஷ்டத்திற்கெல்லாம் பதிலாக இதுதானடா எனக்குக்கிடைப்பது? உன்னைத் தொட்டிலி லாட்டினேனே, அழகிய அந்த வாய்க்குப் பாலூட்டினேனே, உனக்குக் கௌரவமான ஆடைகள் தைத்துப் போட்டேனே. ஒவ்வொரு நாளும் உனக்கு மருந்துகொடுப்பேனே; கொடுத்த மருந்து உடம்பில் பிடிக்கிற வரையில் அழுவேனே.

டோனி:—அடேயடே! பிறந்தநாள் முதல் இப்படி மருந்து கொடுத்துக் கொடுத்து என்னைப் பாழாக்கியதற்கு நீ அழத்தான் வேண்டும். அடையடே! சொல்லுகிறேன் கேள்; இனிமேல் என்னை இப்படி மடையனாக்க இடங்கொடுக்க மாட்டேன்.

டோரதி:—எல்லாம் உன்னுடைய நன்மைக்குத்தானல்லவா, ஏ விஷப் பாம்பே, எல்லாம்! உன்னுடைய நன்மைக்குத்தா னல்லவா?

டோனி:—ஏ ஏ! என்னையும் என் நன்மையையும் நீ சும்மா விட்டுவிட்டால் போதும். எனக்கு ஏதாவது நன்மை வரவேண்டியிருந்தால் அது தானேவரட்டும். நான் உற்சாகமாயிருக்கும்போதெல்லாம் நீ இப்படிச் சொல்லிச் சொல்லி என்னை அடக்கவேண்டாம்.

டோரதி:—அது பொய். நீ உற்சாகமா யிருக்கும்போது என்கண்ணில் தென்படுவதே யில்லையே. உன் கூட்டாளிகளோடுதான் கும்மாளம் அடிக்கப் போய்விடுகிறாய். இரக்கமற்ற இராக்ஷஸா, உன் இனிய வலிய குரலைக்கேட்டு ஆனந்திக்க நானெங்கே கொடுத்துவைத்திருக்கிறேன்.

டோனி:—நம்மிருவரில், உன் குரலின் வலிமை எனக் கேது, அம்மா.

டோரதி:—இப்படி எங்கேயாவது வேறு பார்த்திருக்கிறீர்களா, ஐயா? என் மனதைப் புண்படுத்த வேண்டு மென்று பார்க்கிறான், தெரிகிறது, தெரிகிறது.

ஹேஸ்ட்:—இந்த இளைஞருக்கு நான் சிறிது புத்தி சொல்லும்படி அனுமதி கொடுங்கள். அவருடைய கடமையை அவர் உணரும்படி செய்கிறேன் பாருங்கள்.

டோரதி:—நல்லது, நெவில்லி, என் அன்பே, வா போவோம். ஐயா, இந்தப் பிள்ளையால் நான் என்ன நிலையில் இருக்கிறேன் என்பதை நீங்களே பாருங்கள்.

[டோரதியும் நெவில்லியும் போகிறார்கள்]

டோனி:—அவளைப் பொருட்படுத்தாதே; அழட்டும், அதுதான் அவளுக்கு ஆறுதல். அவளும் என் தங்கையும்ஒருபுத்தகத்தைப் படித்துப்படித்து அழக் கண்டிருக்கிறேன். எத்தனைக் கெத்தனை ஒரு புத்தகம் தங்களை அழவைக்கிறதோ அத்தனைக்கத்தனை அதன் மேல் தங்களுக்கு ஆசை என்பார்கள்.

ஹேஸ்ட்:—மாதர்களினுடைய நட்பிற்கு நீஆசைப்படுவன் அல்லன் என்பது தெரிகின்றது. அழகிய இளைஞனே, அப்படித்தானே?

டோனி:—இங்கே இவர்களைப் பார்த்தவரையில், அப்படித்தான்.

ஹேஸ்ட்:—உன் தாயார் உனக்கென்று தேர்ந்து வைத்திருக்கின்ற இப்பெண்ணையும் நீ விரும்பவில்லை என்று நினைக்கின்றேன். ஆயினும், அவள் நல்ல அழகும் நல்லகுணமும் உடையபெண்ணாகவே எனக்குத் தோன்றுகின்றாள்.

டோனி:—ஏனென்றால், அவளைப்பற்றி எனக்குத் தெரிந்திருக்கிற அளவு உனக்குத் தெரியாது. அவளை எனக்கு அங்குலம் அங்குலமாகத் தெரியுமே. இவளைவிடப் பிடிவாதமும் வாய்த்துடுக்கு முடைய ஒரு பிசாசு இந்த உலகத்திலேயே இல்லை.

ஹேஸ்ட்:—(ஒரு புறமாய்) காதலனொருவனுக்கு நல்ல உற்சாகம் ஊட்டத்தக்க வார்த்தைகள் இவை!

டோனி:—இவளை எனக்குச் சிறுவயதிலிருந்து தெரியும். நரியைவிடச் சூது, குரங்கைவிடக் குறும்பு.

ஹேஸ்ட்:—எனக்கோ, புத்திசாலியாகவும் சாந்தமுடையவளாகவும் தோன்றுகின்றாளே.

டோனி:-ஆம், நாலுபேருக்குமுன் அப்படித்தான். தன் தோழர்களோடிருக்கட்டும்; அப்பொழுது பன்றி மாதிரி உறுமிக்கொண்டே யிருப்பாள்.

ஹேஸ்ட்:—மற்று, அவள் சாந்தமும் அடக்கமும் என் மனத்தைக் கவர்கின்றனவே.

டோனி:—ஓகோ! நீ மாத்திரம் அவளைக் கொஞ்சம் அடக்கிப்பார், அப்பொழுது தெரியும். விட்டாளானால் ஒரு உதை விழுந்தாய் நீ சாக்கடையில்.

ஹேஸ்ட்:—நல்லது, ஏதோ, அழகேனும் அவளுக்கிருக்கிறதென்று நீ ஒத்துக்கொள்ளவேண்டும். அவளுக்கு அழகுஇருக்கிறதென்று நீ ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

டோனி:—ஆடைப் பெட்டி! எல்லாம் வைத்துக் கட்டினது ஐயா, அவள். ஆகா! என் பெட் பௌன்ஸர் என்பவளை மாத்திரம் பார்ப்பாயானால், அப்புறம் அழகைப்பற்றி நீ பேசலாம். அடேயடே! நாகப்பழம் மாதிரி இரண்டுகண்கள்; பட்டுமெத்தை மாதிரி சிவந்து அகன்ற கன்னங்கள்; அவளைக்கொண்டுஇந்த நெவில்லியைப்போல் இரண்டு பேர் பண்ணலாமே.

ஹேஸ்ட்:—நல்லது, கசப்பான இந்தக் காரியத்தை உன் கையைவிட்டு வாங்கிக்கொண்டுபோக ஒரு நண்பன் கிடைப்பானானால், என்ன சொல்லுவாய்?

டோனி:—உடனே.

ஹேஸ்ட்:—நீயும், உன் ஆசை பெட்ஸியும் சந்தோஷமாக இருக்கும்படி விட்டுவிட்டு, நெவில்லியை ஒருவன் கொண்டுபோய்விடுவானானால் அவனுக்கு நீநன்றியுடையவனாக இருப்பாயா?

டோனி:—ஓகோ! ஆனால், எங்கே அந்த நண்பன். ஐயோ, அவளைக் கொண்டுபோக ஒருவ[illegible]

[illegible]

ஹேஸ்ட்:—நான்தான் அவன், நீ மாத்திரம் உதவி செய்வாயானால், நான் அவளை அயல்நாட்டிற்கு அடித்துக்கொண்டுபோய்விடுகிறேன். அப்புறம் அவள் பேர்கூட உன் காதில் விழாது.

டோனி:—உதவியா உனக்குச் செய்ய வேண்டும்! அடேயடே! என் இரத்தத்தின் கடைசித்துளி வரை சிந்தியாகிலும் இதை முடித்துவைப்பேனே. இதோ, வண்டியில் நானே குதிரைகள் கட்டிக் கொணர்ந்து உங்களைக் கடகடவென்று உருட்டிக்கொண்டு போகட்டுமா. இதனோடு, அவளுடைய ஆஸ்தியில் ஒரு பங்கும் உனக்குக் கிடைத்தாலும் கிடைக்கும். அதைப்பற்றி நீ கனவிலுங்கூட நினைத்திருக்கமாட்டாய். அந்த ஆஸ்தி நகைகளாக இருக்கின்றது.

ஹேஸ்ட்:—என் அருமை நண்பா, இப்பொழுது அல்லவோ, உன் உற்சாகம் நன்றாகத் தெரிகின்றது.

டோனி:—நல்லது வா, இது முடிவதற்குள் என் உற்சாகம் இன்னும் எத்தனை தெரிகின்றது. பார்.

[போகிறார்கள்]

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[292-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) தமிழில் இராமன் சரிதை

இவ்வாறு இராமனது சரிதை பற்பல மொழிகளிலெழுதப்பட்டிருப்பது போல், தமிழ் மொழியிலும் கடைச்சங்கத்தார் காலத்திலும் பல விருந்தனவென்பதற்குயாதொரு சந்தேகமுமில்லை. அப்பொழுது சங்கராமாயணமென்பதொன்றிருந்ததாகவும், அது இறந்ததாகவும் காணப்படுகின்றது. சங்கத்தார் காலத்திற்குப் பின் வந்த கவீஸ்வரர்களான, சம்பந்தர் அப்பர் முதலியோர் அதைக் கையாண்ட சான்று அவர் பதிகங்களில் விளங்கும் - அவற்றை நாம் அறியவேண்டுவது அவசியமாதலால், இதுபற்றிய நம் சமயகுரவர் திருவாக்கைக் காண்போம்.

திருஞானசம்பந்தர் இராமரால் செய்யப்பட்டனவாகிய இரண்டு சிவஸ்தலங்களின்மீது பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றில் ஒன்று சோழநாட்டில் தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஐந்து மைல்தூரத்திலுள்ள இராமனதீச்சரம் என்பது; மற்றொன்று பாண்டிநாட்டிலுள்ள இராமேச்சுரம். இவற்றுள் முன்னதில் உள்ள பெருமான் பெயர் இராமநாதர், அம்மையின் பெயர் சரிவார்குழலி. பின்னதில் உள்ள பெருமான் பெயரும் இராமநாதர்; அம்மையின் பெயர் மாத்திரம் பருவதவர்த்தினி. * ஆகையினால் இராமர் தன் சேனையுடன் சென்ற தமிழ்நாடுகளிரண்டிலும், அவர் தங்கிய இடங்களில், சிவஸ்தலங்கள் ஏற்பட்டனவென்பது திண்ணம். இராமர் மிகவும் சிறந்தவொரு சிவபக்தரென்பது பின்வரும் தேவாரப் பதிகங்களாகிய இராமசரித்திரச் சொற்றொடர்களை நோக்கின் விளங்கும்:—

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்று வித்தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்தவிரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே. (2)

மான்அனநோக்கியைத்தேவிதன்னையொருமாயையால்
கானதில் வவ்விய காரரக் கன்னுயிர் செற்றவன்
ஈன மிலாப்புகழ் அண்ணல் செய்த விராமேச்சுரம்
ஞானமும்நன்பொருளாகின் றதொருநன்மையே (3)

உரையுணராதவன்காமமென்னும்முறுவேட்கையால்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமரு வுங்கட லோத மல்கும் இராமேச்சுரத்
தரையர வாடநின் றாடல்பேணுமம் மானல்லனே.(4)

அணையலை சூழ்கடல் அன்றடைத் துவழி செய்தவன்
பணையி லங்கும்முடி பத்திறுத் தபழி போக்கிய
இணையிலி யென்றுமி ருந்தகோயி லிரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத் தத்துயர் நீங்குமே(6)

பகலவன் மீதியங் காமை காத்த பதியோன்றனை
இகலழி வித்தவன் ஏத்து கோயிலி ராமேச்சுரம்
புகலியுள் ஞானசம்பந்தன் சொன்னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின்றேத்தவல்லார்க் கில்லை யல்லலே.(11)

—திருஞான சம்பந்தர்—திருவிராமேச்சுரம் - பண் - காந்தார பஞ்சமம்.

[குறிப்பு:—இராவணனைப் "பொன்றுவித்த பழி" என்னும் சொற்றொடரைக் கவனிக்க]

இராமன் இராமேச்சுரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது வால்மீகி ராமாயணத்தில் காணப்படவில்லை. வால்மீகிக்கு இது தெரிந்திராதென்பது திண்ணம். இதன்றியும் ஆரியர் யாவரும் வைணவர்கள். தென்னிந்தியாவின் குடிகளும் இலங்கைவாழ் சனங்களும் சிவபக்தர்கள். சுக்கிரீவன், அநுமான், சாம்புவான், அங்கதன் முதலிய வானர வீரர்கள் யாவரும் சைவரென்றே, தென்னாட்டில் அவர்கள் பூசைசெய்த பல ஸ்தலங்கள் ஏற்பட்டிருப்பதினின்று தெரிவதால், இராமரும் அவர் தம்பியும் சைவசமயத்தாராக நடந்தனரென்றே எண்ணல் வேண்டும்.

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெஞ்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

—சம்பந்தர் - திருவுசாத்தானம் - பண் - கொல்லி - 1.

இராமேச்சுர முதலிய சிவஸ்தலங்கள் இராமரால் ஸ்தாபிக்கப்பட்டனவென்பதற்குத்தென்னாட்டில்பல ஆதரவுகள் இருக்ன்றன. இலங்கையினின்று அயோத்திக்கு மீண்ட காலத்தில் இராமேச்சுரத்திலிருந்து வடக்கே கிஷ்கிந்தைக்கு நிலமார்க்கமாகச் சென்றிருக்கவேண்டுமென்பதும், பிறகு புட்பக விமானத்தைப் பயன்படுத்தியிருக்கலாமென்றும், இவைகளைவால்மீகிமுதலானோர் அறிந்திருக்கமாட்டாரென்பதும் ஆங்காங்குக் காணப்படும் சான்றுகளாலநுமானிக்கலாம். சூரபன்மனை முருகக்கடவுள் அழிப்பதற்காகக் கயிலையிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்த காலத்தில் அங்கிருந்ததாக மொழியப்பட்ட பெரிய நகரங்களேனும் தலங்களேனும் வால்மீகி இராமாயணத்தில் மொழியப்படவில்லை. கபாடபுரத்தைப்பற்றி வால்மீகி கூறுவதால் இராமன் காலம் இடைச்சங்கத்தவர் காலத்திற்குப் பிற்பட்டதன்றெனத் துணியலாம். ஆயினும் இராமனால் பூசிக்கப்பட்டதெனத் தொன்றுதொட்டு வழங்கும் திருப்பதிகள் இக்காலக் கற்பனை யன்றென்றும், அவை குரங்குச் சேனை வந்த வழியிலிருந்தவைகளென்றும் கொள்ளலாகும். ஆரியபாடையிற் கூறிய ராமாயணப் போக்கு ஒருவகையாயும் தமிழ்நாட்டில் வழங்கிவந்த இராமன்சரிதை மற்றொருவகையாகவும் காணப்படுகின்றது. *

திருநாவுக்கரசு திருவிராமேச்சுரப்பதிகத்தில் இராமன் சரிதையைப் பின்வருமாறு விளக்குகின்றார்:—

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினால்மால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலேநினைமின்நீர்நின்றுநாளுந்
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே. (1)

முற்றினநாள்களேன்றுமுடிப்பதேகாரணமாய்
உற்றவன்போர்களாலேயுணர்விலவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயில்திருவிராமேச்சுரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே —(2)

கடலிடை மலைகள் தம்மா
லடைத்துமால் கருமம் முற்றித்
திடலிடைச் செய்த கோயில்
திருவிரா மேச்சு ரத்தை
தொடலிடை வைத்து நாவிற்
சுழல்கின்றேன் தூய்மை யின்றி
உடலிடை நின்று பேரா
ஐவராட் டுண்டு நானே. (3)

குன்றுபோற் றோளு டைய
குணமிலா வரக்கர் தம்மைக்
கொன்றுபோ ராழி யம்மால்
வேட்கையாற் செய்த கோயில்
நன்றுபோல் நெஞ்ச மேநீ
நன்மையை யறிதி யாயில்
சென்றுநீ தொழுதுய் கண்டாய்
திருவிரா மேச் சுரமே. (4)

வீரமிக் கெயிறு காட்டி
விண்ணுற நீண்ட ரக்கன் †
கூரமிக் கவனைச் சென்று
கொன்றுடன் கடற்ப டுத்துத்
தீரமிக் கானி ருந்த
திருவிரா மேச்சு ரத்தைக்
கோரமிக் கார்த வத்தாற்
கூடுவார் குறிப்பு ளாரே. (5)

ஆர்வலம் நம்மின் மிக்கா
ரென்றவவ் வரக்கர் கூடிப்
போர்வலஞ் செய்து மிக்குப்
பொருதவர் தம்மை வீட்டித்
தேர்வலஞ் செற்ற மால்செய்
திருவிரா மேச்சு ரத்தைச்
சேர்மட நெஞ்ச மேநீ
செஞ்சடை யெந்தை பாலே. (6)

வாக்கினாலின்புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம் ‡
போக்கினாற்புடைத்தவர்களுயிர் தனை யுண்டுமால்தான்
தேக்குநீர் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நோக்கினால் வணங்கு வார்க்கு நோய்வினை
[நுணுகு மன்றே. (7)

பலவுநாள் தீமை செய்து பார்தன்மேற் குழுமி வந்து
கொலைவிலார்கொடியராயவரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலையினான் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைத்
தலையினால்வணங்குவார்கள்தாழ்வராந்தவமதாமே.
கோடிமாதவங்கள்செய்துகுன்றினார் தம்மையெல்லாம்
வீடவே சக்க ரத்தால் எறிந்துபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ நன்னெறி யாகு மன்றே. (9)

வன்கண்ணர் வாள ரக்கர் வாழ்வினை யொன்ற றியார்
புன்கண்ண ராகி நின்று போர்கள்செய் தாரை மாட்டிச்
செங்கண்மால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைத்
தங்கணா லெய்த வல்லார் தாழ்வராந் தலைவன் பாலே(10)

வரைகளொத் தேயு யர்ந்த மணிமுடி யரக்கர் கோனை
விரையமுற் றறவொ டுக்கி மீண்டுமால் செய்த கோயில்
திரைகள்முத் தால்வ ணங்குந் திருவிரா மேச்சு ரத்தை
உரைகள்பத் தாலு ரைப்பா ருள்குவா ரன்பி னாலே (11)

* ஆதியில் சிவஸ்தலங்களில் சிவலிங்க மூலவர் ஒன்றே இருந்தது என்பதும், பிறகு இடைக்காலத்தில் (Middle Ages) ஆங்காங்குள்ள கிராம தேவதைகளே பார்வதியாக மருவி அம்மன்களாக அமைந்த தன்மையும், பல சிவஸ்தலங்களில் விளங்கும். திருஞானசம்பந்தர் பாடிய திருவிராமேச்சுரத் திருப்பதிகத்தில் 6-ம் செய்யுளில் "துணையிலி" என்னும் சொற்றொடரைக் கவனிக்க.

* இதுவேதான கம்பராமாயணத்திற்கும், வால்மீகிராமாயணத்திற்கும் உள்ள பேதங்களுக்குக் காரணம்.

† இது கும்பகர்ணனைக் குறிப்பிடுவது போலும்.

‡ இது விபீஷணனைக் குறிப்பிடுவதுபோலும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து. 6-ம் தசகம்.

[303-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

கற்பகக் காவென நற்பல தோளற்குப்
பொற்சுடர்க் குன்றன்ன பூந்தண் முடியற்கு
நற்பல தாமரை நாண்மலர்க் கையற்கென்
விற்புரு வக்கொடி தோற்றது மெய்யே.

அவதாரிகை:-இத்தசகமானதுமுதலில் திருவிக்கிரமாவதாரத்தின் காம்பீர்யத்தையும் உலகங்களை யளக்கையில் பகவான் நிமிர்த்திய திருப்பாதங்களினழகையும் ஆச்சரியப்பட்டு வர்ணித்துப் பிறகு வராகமூர்த்தியின் அவதாரத்தையும், பூமிபிராட்டியை அவர்மணந்ததையும் அநுஸந்தித்தது. சென்ற பாசுரத்தில் பாற்கடலிலே இலக்குமி பிராட்டியுடன் பள்ளிகொண்டு பகவான் ஆதிசேஷன்மேல் துயின்றிருந்த அழகை இயம்பிற்று.—இப்பாசுரத்தில் எந்த மூர்த்திமானை பகவானைத் துதிசெய்கிறார் என்றறிய இதனுள் கமகம் ஒன்றுமில்லையானாலும் பின்னடுத்தபாசுரத்திலும் ஆதிசேடனைப் பற்றியே தொடர்ந்து பிரஸ்தாபிப்பதால், இப்பாசுரமும் திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் பிரானுடையவர்ணனையென்றே பொருள்கொள்வது உசிதம்.

குறிப்பு:—க்ஷீராப்திநாதன் சதுர்புஜன் ஆதலினால், "பல" தோளரென்றும் நாண்மலர்க்கையற்கென்றும் பாடியிருக்கின்றார். "விற்புருவக்கொடி" யென்று தன் மகள் வில்போன்ற புருவத்தால் க்ஷீராப்திநாதனையும் மோஹிக்கும்படி செய்யவேண்டியவளாயிருக்க அவனிடத்திலிவள் ஈடுபட்டுவிட்டாளே என்று விஸ்மயந் தோன்ற உரைத்தபடி.

பொழிப்புரை:—திருப்பாற் கடலிலே பிராட்டியோடே கலந்து ரஸிக்கையாலே ஒரு கற்பகச்சோலை தழைத்தாற்போ லிருக்கிற திருத்தோளி னழகுக்கும், தாமரைதடாகத்தில் பூக்கள் விகஸித்ததுபோலுள்ள திருக்கைகளி னழகுக்கும் தேஜோமயமான பொற் குன்றம்போல் விளங்கும் திருவபிஷேகத்திற்கும் இவைகளினெல்லாவற்றி னழகுக்கும், ஆற்றாளாய், அழகிய புருவங்கள் உள்ள யென்பெண் தன் திருமேனியைத் தோற்றாள்.

7-ம் பாசுரம்.

மெய்யமர் பல்கலன் நன்கணிந் தானுக்குப்
பையர வின்னணைப் பள்ளியி னானுக்குக்
கையொடு கால்செய்ய கண்ணபி ரானுக்கென்
தையல் இழந்தது தன்னுடைச் சாயே.

உரை:—மெய்யமர் திருமேனிக்குச் சேர்த்தியாயிருக்கிற பலதிவ்விய ஆபரணங்களைச் சார்த்திக்கொண்டிருக்கின்ற திவ்விய அழகுள்ளவனுக்கு, பையரவின்-படங்களோடு கூடிய தலையையுடைய ஆதிசேஷனைத் தனக்கு அணையாகச்-சேர்த்தணைப்பதால் மஹாதேஜஸையுடைய, பள்ளியினானுக்கு - படுக்கையாகவுள்ளவனுக்கு, கையொடு கால் செய்ய கண்ணபிரானுக்கு- திவ்வியமான செந்தாமரை போல விளங்கும் திருக்கைகளும் திருப்பாதங்களுமுள்ளவனுக்கு, என் தையல்-என் பெண், தன்னுடைய சாயையை இழந்தாள். இவ்வண்ணம் திவ்விய சோபையும் வடிவழகுமுள்ள பிரானை நினைந்துநினைந்து அவன் கலவைகிடைக்காமையால் என்பெண் தன் ஸொந்த வடிவழகையும் அணியும் ஆபரணச் சேர்த்தியால் உண்டான சேர்க்கை யழகையும் இழந்தாள்.

8-ம் பாசுரம்

சாயக் குருந்த மொசித்த தமியற்கு
மாயச் சகட முதைத்த மணாளற்குப்
பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கென்
வாசக் குழலி யிழந்தது மாண்பே.

உரை:—இப்பாசுரம் கிருஷ்ணாவதாரத் திவ்விய சேஷ்டைகளைக் குறிக்கின்றது. குருந்த விருக்ஷத்தை, சாய - தரைப்படும்படி அடியோடு சாய்த்து அதனில் குடிகொண்டிருந்த அசுரனை மரணமடையச்செய்த, தமியற்கு (distinct by himself) தனக்குவமையில்லாதவனுக்கு அதாவது மாட்சிமையுள்ள கண்ணனுக்கு, மாயச் சகடம் உதைத்த - சகடாசுரனைத் திருவடிகளால் உதைத்து மாய்த்தவருக்கு, மணாளற்கு-(இவ்விரசரித்திரங்களாலும்) ஏழுகாளையைவீர சல்லமாய் அடர்த்த சௌரியத்திற்கு மீடாக நப்பின்னைபிராட்டியை மணந்தவர்க்கு, பேயைப் பிணம்பட-பூதனையை அவன் முலைகளை உறிஞ்சிக் கொன்ற பிரானுக்கு, வாசக்குழல் - இயற்கையாய் வாசனை பெற்ற கூந்தலுடைய என் பெண், மாண்பை - ஸௌந்தரியத்தை, இழந்தாள்.

9-ம் பாசுரம்

மாண்பமை கோலத்தெம் மாயக் குறளற்குச்
சேண்சுடர்க் குன்றன்ன செஞ்சுடர் மூர்த்திக்குக்
காண்பெருந் தோற்றத்தெங் காகுத்த நம்பிக்கென்
பூண்புனை மென்முலை தோற்றது பொற்பே.

விசேஷக்குறிப்பு:—வாமனாவதாரத்தில் சிறுகுள்ள பிரம்மச்சாரியாய் பகவான் உருவம் எடுத்ததை "மாண்பு அமை கோலம்" என்கிறார். "எம் மாயம் குள்ளர்"- தாம்எடுத்த வேஷத்தி னழகால் மஹாபலி சக்கிரவர்த்தி மோஹித்துத் தன்னை மஹாவிஷ்ணு யாசிக்கிறாரென்றும், மோசம் போகாதே யென்றும் தன் குரு சுக்கிராசாரியார் எச்சரித்தும், தானங் கொடுத்தது மோஹத்தில் அகப்பட்டு மோசம்போன விஷயமென்று திருவுள்ளம்—"மாவலி மூவடிதா"வென்று மழலைச் சொல்லால் யாசித்ததும் மாயமே. சிறு குள்ளனாய்யாசித்தாலும் பிறகு திருவிக்கிரமனாய் மூன்று உலகங்களையும் அளந்தபடியினால் "மாண்பு அமை" என்றார். இப்படி உலகளந்த வவதாரமெடுத்தது, சேண் - உன்னதத்தில், சுடர்க் குன்றன்ன தேஜோ மயமான மலை போல், செஞ்சுடர் மூர்த்திக்கு - தாமரை மலர்கள் விகஸித்தாற் போலுள்ள திருப்பாதங்கள் திருப்புஜங்கள் திருக்கண்கள் இவைகள் எல்லாம் "செஞ்சுடராய்" ஆழ்வார்புத்தியிலுதித்தபடி வர்ணித்திருக்கிறார். காண் - கண்டாலே, பேசிப் பரிச்சியமில்லாதபோதிலும் - பெருந் தோற்றம் - எல்லார் மனத்தையும் கவர்ந்து கம்பீரமாய்ப் பிரகாசிக்கும் நற்குண நற்செய்கைகளையே யுடைய, எம் காகுத்தன் நம்பி - குண பரிபூரணன ஸ்ரீராமபிரானுக்கு, பூண் - ஆபரணங்களையணிந்த மென் முலைகளுடைய என் பெண், பொற்பு - திவ்வியமான காந்தியை இழந்தாள். தேஜோமயமான மலையானாலும் ஆகாயத்தில் உன்னதமாயிருப்பதைக் காண்பதரிது. ஆழ்வார் திருவுள்ளத்தால் கண்டபடி சேவடிகளும் அரவிந்த லோசனங்களும் தாமரைக்காடு பூத்தாற் போலுள்ள திருக்கைகளும் வர்ணித்தது நாமு மறியச் சொன்னபடி.

10-ம் பாசுரம்.

பொற்பமை நீண்முடி பூந்தண் டுழாயற்கு
மற்பொரு தோளுடை மாயப்பி ரானுக்கு
நிற்பன பல்லுருவாய் நிற்கு மாயர்க்கென்
கற்புடை யாட்டி யிழந்தது கட்டே.

உரை:—பொற்ப - அழகு அமைந்த நீண்ட கிரீடத்தில் குளிர்ந்த துளபமாலை யணிந்தவருக்கு, மல்பொரு - மல்லர்களோடு- கிருஷ்ணபகவான்மேல் கம்ஸன் ஏவிய மல்லர்களோடு, பொரு - போர்விளைத்து ஜயமடைந்த தோள்களையுடைய ஆச்சரியசக்தியுள்ள கண்ணபிரானுக்கு, நிற்பன பல்லுருவாய் - யுக ஆரம்பத்தில் தானே பல்லுருவாய் உலகத்தில் தன்னை யாக்கிக்கொள்வே னென்ற ஸங்கல்பத்தால் வெகு உருக்கள் ஆகி நிற்கும் - உலகத்தின் இயல்பை நடாத்தும், மாயற்கு - அதி ஆச்சரிய சக்தியுள்ளவருக்கு, கற்பு - தர்ம ஸ்வரூபத்தை நன்றாயறிந்த என் பெண், கட்டே - கற்பு நிலையை பகவானுக்குத் தோற்றுவிட்டாள். "நிற்பன பல்லுருவாய்" என்பதற்கு உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும் அவைகளின் தோஷம் தட்டாதே அந்தராத்ம பூதனாய் நிற்கும் என்ற பொருள் கூறவும் கூடும்.

11-ம் பாசுரம்

கட்டெழிற் சோலைநல் வேங்கட வாணனைக்
கட்டெழிற் றென்குருகூர்ச் சடகோபன்சொல்
கட்டெழி லாயிரத்தில் பத்தும் வல்லார்
கட்டெழில் வானவர் போக முண்பாரே.

உரை:—வெகு அழகான உத்தியான வனங்களை யுடைத்தான திருவேங்கடமலைக்குப் பிரபுவானவனை, வெகு அழகுவாய்ந்த குருகூர் நகர் நிர்வாஹகரான ஆழ்வார்சொன்ன வெகு ரஸமுள்ள ஆயிரத்துள் இப் பத்தும் ஓதுவார் வெகு விசித்திரமானவிண்நாட்டின் போகத்தை வானவரோடு கூடவிருந் தாள்வார்கள்.

விசேஷக்குறிப்பு:—இத் தசகத்தில் எம்பெருமான் தன்னை ஆச்ரயிக்கிற பக்தர் தங்களுடைய அகங்காரம் மமகாரத்தையும் தைரிய சௌரியாதிகளையும் இழந்துபோய்த் தன்னிடத்திலேயே ஊன்றி யிருக்கும்படி செய்துவிடுவானென்று ஆழ்வார் கற்பிக்கிறார்.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

IV. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரங்கள்.

[271-வது பக்கத் தொடர்ச்சி]

1. இராகம்—தோடி.] [தாளம்—ரூபகம்.

பல்லவி

ப்ருந்தாவன லோல—கோவிந்த் அரவிந்தானன.............................(ப்ருந்தாவந)

அநுபல்லவி

ஸுந்தராங்க த்ருத ரதாங்க ஸுஜநாரி திமிர பதங்க.... ....(ப்ருந்தாவந)

சரணம்

மாமவ ஸ்ரீ ரமணீமணி மதனச் ரிதமித்ர
ராமதாஸ தாஸ த்யாக ராஜநுத சரித்ர.................................(ப்ருந்தாவந)

பொருள்

ப்ருந்தாவந லோல - பிருந்தாவனத்தில் சஞ்சரித்து லீலைகளைப் புரிந்தவனே! **கோவிந்தா** - ஆநிரை காத்தவனே! அரவிந்த ஆனன - தாமரை போன்ற முகத்தை யுடையவனே!

ஸுந்தராங்க-திவ்விய திருமேனியுடையவனே! த்ருத ரதாங்க - சக்கராயுததாரியே! ஸுஜநாரி திமிரபதங்க-ஸாதுஜனங்களின் சத்துருவாகிய (அஞ்ஞான) இருட்டை யொழிக்கும் சூரியனே!

ஸ்ரீ ரமணீ மணிமதன - லக்ஷ்மிப் பிராட்டிக்குப் பிரியமானவனே! ஆச்ரித மித்ர - சரண் புகுந்தவர்களுக்கு மித்திரனே, ராமதாஸ தாஸ த்யாகராஜநுத சரித்ர - ஸ்ரீ ராமதாஸ ஸ்வாமியின் தாஸனான தியாகராஜனால் கொண்டாடப்பட்ட சரித்திரத்தை யுடையவனே! மாம் அவ - என்னைக் காப்பாற்று.

தோடிராக லக்ஷணம்

ஸ்ரீ ரங்கநாதனைப் பற்றிய ஸ்தோத்திரமான 'ராஜு வெடலே' என்ற கீர்த்தனையின் குறிப்பில் தோடி ராக லக்ஷணத்தைப் பற்றிக் காண்க. (173-வது பக்கம்)

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.

பல்லவி

; * ஸரி	கா, ரீஸா	ஸநிதநி	ஸா ; ; ;	ஸரிகம	கா; ரீஸா	ஸநிதநி	ஸா ; ; ;
; * ப்ருந்	தா; வந	லோ. . .	ல ; ; ;	ப்ருந். . .	தா; வந	லோ. . .	ல ; ; ;
ஸரிகம	பமகாரீஸா	ஸநிதநி	ஸா ; ; ;	ஸரிகம	தபபம கரிஸா	ஸநிதநி	ஸா ; ; ;
ப்ருந். . .	தா. . வந	லோ. . .	ல ; ; ;	ப்ருந். . .	தா. . . வ. ந	லோ. . .	ல ; ; ;
ஸரிகம	தபபம கரிஸா	ஸநிதநி	ஸா ; ; ;	தா தா	தா; நிதபா	கா;	பமகா ரீஸா
ப்ருந். . .	தா. . . வ. ந	லோ. . .	ல ; ; ;	கோ விந்	தா; அ. ர	விந்;	தா. . ந ந
ஸரிகம	தபபம கரிஸா	ஸநிதநி	ஸா ; ; ;	ஸரிகம	பதநிஸ்ா;	நீதா	மாகா,ரிஸநி
ப்ருந். . .	தா. . . வ. ந	லோ. . .	லா ; ; ;	கோ. . .	விந். . தா;	அர	விந்தா,ந. ந

(ப்ருந்தாவன லோல)

அநுபல்லவி

தாரீ	ஸ்ா - ஸ்நிதாபா ‖	தாதா	நீஸ்ா ; ஸ்ா ‖	பதநி ஸ்	ரிஸ் - நித்நிதபம ‖	தாதா	நீ ஸ்ா; ஸ்ா ‖
ஸாந்	த - ராங் . க ‖	த்ருத	ரதாங்; க ‖	ஸாந்..	த. - ரா..ங்க. ‖	த்ருத	ர தாங், க ‖
ப தநிஸ்	ரிஸ் - நிதநிதபம ‖	தாதா	நீ-ஸ்ா, ரிக்ாரீ ‖	ஸ்ாஸ்ா	ஸ்நிதா பாபா ‖	நிதப	மகபமகாரிஸ ‖
ஸாந்..	த. - ரா...ங்க ‖	த்ருத	ர - தா, ங் . க ‖	ஸாஜ	நா.. ரி தி ‖	மி. ர.	ப. தங்..க ‖

(ப்ருந்தாவந லோல)

சரணம்

; * மா	; மாமாமா ‖	மாமா	கமபா பமகா ‖	; - பம	கா; ரீஸா ‖	ஸரிகம	தபபமகா ; ‖
; * மா	; மவ ஸ்ரீ ‖	ரம	ணி.. ம. ணி ‖	; - மத	ஞ; ப்ரித ‖	மி...	...த்ர ; ‖

"ராமதாஸ...........சரித்ர" அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

மதுரைக் கோவை

[300-வது பக்கத் தொடர்ச்சி]

XX. உடன்போக் கொருப்படுத்தல்

தோழி தலைவந்துத் தலைவி கருத்தறிவித்தல்

சுரும்பாடு கொன்றையந் தார்ச்சொக்கர் மால்வரைத்
தோகைநெஞ்சந்
தரும்பா வனையென்ன தாமறி யேன்வண்டு
தாதருந்த
வரும்பா யலில்வளர் வண்டலம் பாவையை
மார்பிலணைத்
தரும்பா முலைகொடுத் தஞ்சன வார்புன
லாட்டினளே. 261.

தலைவன் அதரதியல்பு கூறி மறுத்தல்

வெல்லுங் கொடியிடை வெள்ளிமன் றுளர்பொன்
மேருவெற்பும்
வல்லும் பொருத வனமுலை யாய்கட
வாரணமுங்
கல்லுங் குதிகொண் டுருகும்வெம் பாலைக்
கடங்கடந்து
செல்லும் படிவல்ல தோதிருப் பாவைசெஞ்
சீறடியே. 262.

ஆதரங் கூறல்

கள்ளந் தருகயற் கண்ணிவெம் பாலை
கடப்பதற்கு
ளுள்ளங் கவலைப் படுவதென் னேபகை
யோடவென்று
துள்ளம் பொருவிடை யார்சொக்கர் மால்வரைத்
தோன்றலருள்
வெள்ளந் தலைப்படும் போதெளி தாமந்த
வெஞ்சுரமே. 263.

பிரியின் உயிர் வாழா ளென்றல்

குருக்குஞ் சிறுபிறை யார்சொக்க நாயகர்
கூடலன்னார்
பெருக்கும் பழிபொறுத் தாற்றுமென் றுலுமுன்
பிள்ளைவண்டார்
மருக்குங் குமபுய முந்திரு மார்பு
மறந்துயிர்கொண்
டிருக்குந் தகைமைய ளோவண்ண லேயென்
னிளங்கொடியே. 264.

உடன்போக்கைத் தோழி தலைவிக் கறிவித்தல்

ஆன்பா லருந்துங் கிளிகன்று தேடி
யழுங்கவரி
மான்பாலு நாளை யருந்துமென் றூர்வரி
வண்டுமுரல்
கான்பாயு மாலைக் கடம்பா டவியிறைக்
கானவெற்பில்
மீன்பாயும் வேல்விழி யாரன்பர் காதல்
விளைவதுவே. 265.

தலைவி வருந்திக் கூறல்

காம்போடு காம்பண விக்கடுங் கானங்
கனல்கொளுந்தி
வேம்போ திடைநின்ற மானமும் பாலை
விசைபரியின்
வாம்போர் வயவர் மதுரேசர் தாளை
வணங்கலர்போற்
றும்போ கவுநெஞ்[சு] சென்றதந் தோநந்
தலைவருக்கே. 266.

கற்புநிலை கூறி ஒருப்படுத்தல்

மற்புக் கலம்பெறு கோளாளர் சொக்கர்
மதுரைவளை
விற்புக் கனிபுரு வத்திரு வேபெண்
விரும்பியநாண்
பொற்புக் கயல்படும் பேருள ராகிலும்
பூண்டதங்கள்
கற்புக் கயல்படும் பேருள ரோகுலக்
கன்னியரே. 267.

நாணழி[வு]க் கிரங்கல்

கொள்ளத் தகுமட நாண்குலப் பால்வருங்
கோதையர்க்கு
மெள்ளக் களைய விதித்தில வேமெய்
புணர்ந்தவர்க்கு
வள்ளத் தழுதர் மதுரா புரிக்கற்பு
வந்துவந்து
தள்ளத் தளர்ந்து தளர்ந்தழி யாநின்று
சாதித்ததே. 268.

தலைவியுடன் போக் கொருப்பட்டுக் கூறல்.

காமாரி வேரிக் கடம்பா டவிமலர்க்
காவினறுந்
தேமாலை யோதிச் செழுந்திரு வேயித்
தெரிவையர்முன்
னேமாறி வம்பல ருக்கிலக் காகி
யிராமலின்று
போமா றொருப்பட்ட நெஞ்சல்ல வோமறம்
பூண்டநெஞ்சே. 269.

தலைவி போக்குடன் பட்டமை தலைவற் குரைத்தல்.

மழுவிற் பொலிகரத் தார்சொக்க நாதர்
மதுரைநன்னாட்
டெழுவிற்பொலிதிருத்தோளண்ணலேகொள்ளை
யிற்றுவண்டு
தொழுதிக் குழல்புறஞ் சோரமை மாரி
கொழிப்பவென்னைத்
தழுவித் தழுவித் தழும்புகொண் டாள்மைத்
தடங்கண்ணியே 270.

வண்டடற் கையடை.

தொழும்போ தருக்கருள் வார்சொக்கர் கூடற்
சுழிக்கழிவாய்க்
கொழும்போ தவிழுந் தடங்கைதை காள்குட
பாலிரவி
விழும்போது துண்ணென்று வண்டலம் பாவை
விளித்துவிம்மி
யழும்போ தரவணைப் பீர்...வந்
தருகிருந்தே 271.

தோழி சுறியிடங் கூறல்.

மையுண்ட கண்டர் மதுரேசர் தாளிணை
வந்திறைஞ்சார்
பொய்யுண்ட நெஞ்சிற் புகுமிருள் வாயிளம்
பொங்கரினுன்
மெய்யுண்ட நெஞ்சின் விரும்பிய காதல்
விளைவதற்கு
நெய்யுண்ட கூரிலை வேலண்ண லேவந்து
நின்றருளே. 272.

தலைவியைத் தோழி சுறியிடத்துக் கொண்டுசென்று தலைவற்குக் காட்டியுரைத்தல்

விள்ளாத காதலுன் மின்னனை யாளன்னை
மெய்யுணர்ந்து
கொள்ளாது கங்குலில் வந்துநின் றுள்சொக்கர்
கூடலிளம்
புள்ளார வாரந் தருமுன்ன மேயெம்
புரவலனீ
துள்ளா நடவு பரிநெடுந் தேர்செலத்
தூண்டுகவே. 273.

தோழி தலைவியை ஓம்படுத்தல்

கங்குற் சுருளை நிகர்த்தற லோதி
கலைநிரம்புந்
திங்கட் கதிரின் விரியுமந் நாளுந்
திளைத்துமையாள்
கொங்கைக் கிளக்கும் புயபூ தரர்சொக்கர்
கூடல் வெற்பர்
மங்கைப் பருவ மெனவிருப் பாயிந்த
வல்லியையே. 274.

வழிப்படுத் துரைத்தல்

திருவே திரைபெற்ற தெள்ளமு தேயுமைச்
செல்லவிட்டிங்
கொருவே னுயிர்தரித் தாற்றும தோவிறந்
தோடிவரு
மருதவே தனைவிர்ப் பாரால வாயி
லலரடக்கி
வருவே னொளித்தவெய் யோனலை யாள
வருமுன்னமே. 275

உடன்போக் கோருப்படுத்தல் முற்றும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[302-வது பக்கத் தொடர்ச்சி]

சோதனை யாயோ விது

வாலியைக் கொல்வென் ஈண்டு அவன்உறைவிடங் காட்டுதி, என்று இராமன் இயம்பிய வளவில், சுக்கிரீவன்,

எழுந்து பேருவ கைக்கடற் பெருந்திரை யிரைப்ப
அழுந்துதுன்பத்துக்கக் கரைகண்டனனனையான்
விழுந்த தேயினி வாலிதன் வலியென விரும்பா
மொழிந்தவீரற்கியாமெண்ணுவதுண்டென மொழிந்
தான்.

[பெரிய மகிழ்ச்சியாகிய கடலின் பெரிய அலைகள் எழுந்து பொங்க, தான் அழுந்தியிருந்த துன்பத்திற்குக் கரை கண்டவனாகி, இனி வாலியின் வலிமை அழிந்தது என்று எண்ணி, தன்னை விரும்பி, அவ் வாலியைக் கொல்வேன் என்றுமொழிந்த இராமபிரானைநோக்கி, "நாங்கள் ஆலோசிக்கவேண்டுவது ஒன்று உளது" என்று மொழிந்தான்.]

மொழிந்து, நினைவும் கல்வியும் சூழ்ச்சியும் நிறைந்த அனுமன் அனைய அமைச்சரோடு வேறோர் தனியிடம் சென்று அமர்ந்தனன். இரவிதனையன் மனத்தின்கண் இருந்ததைச் சமீரணன் மகன் உற்றுணர்ந்து,

உன்னி னேனின துள்ளத்தி னுள்ளத்தை யுரவோ
யன்ன வாலியைக் காலனுக் களிப்பதோ ராற்றல்
இன்ன வீரர்பா லில்லையென் றயிர்த்தனை யினியான்
சொன்ன கேட்டவை கடைபிடிப் பாயெனச் சொன்னான்

[வலிமையுடையவனே, உன் மனத்தின் எண்ணத்தை ஊகித்தேன். அவ்வளவு பலசாலியான வாலியை எமனுக்குக் கொடுக்கக்கூடிய ஒப்பற்ற ஆற்றல், இந்த வீரர்களுக்கு இல்லை என்று நீ சந்தேகங் கொண்டாய், இனி நான் சொல்கின்றவைகளைக் கேட்டு, உறுதியாகக் கொள்வாய்; என்று சொல்லலானான்]

வாலியையும் வெல்ல வல்லனோ இந்நின்ற வொரு இராமன் என்று இவ் வானரத்தலைவன் சங்கையுற்ற போது, அதிகமும் மகத்தான காரணங்கள் காட்டி அவனைத் தேற்றப்புக்க அனுமன், இவ்விராமன் அத்

திரு நெடுமாலே யாதலின், ஆயிரம் வாலிகள் இவன் வாளிக் கொருபொருளோ எனச் சாதிக்கமுயல்கின்ருன்—

சங்கு சக்காக் குறியுள தடக்கையிற் ருளில்
எங்கு மித்தனை யிலக்கணம் யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத் திருநெடு மாலே
இங்கு தித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும்.

[பெரிய அவனுடைய கைகளிலும் கால்களிலும் சங்கு சக்ர இரேகைகள் இருக்கின்றன. இத்தனை இலக்ஷணங்கள் வேறு எங்கும் யாருக்கும் இல்லை. ஆகையால், சிவந்த கண்களையும் வில்லை ஏந்திய கையையும் உடைய இராமன் தருமத்தை நிலைநிறுத்துவதற்கு இப்பொழுது இவ்வுலகத்தில் உதித்தவனாகிய அத்திருமாலே ஆவான்; அன்றியும்]

செறுக்கும் வன்றிறற் றிரிபுரந் தீயெழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக் காலன்றன் காலமுங் காலா
லறுக்கும் புங்கவ ஞண்டபே ராடகத் தனிவில்
லிறுக்குந் தன்மையம் மாயவற் கன்றியு முளதோ.

[யாரையும் வருத்திக்கொண்டிருந்த கொடியவலிமையுடைய திரிபுரம் எரிந்து நீருகும்படி கோபித்து, கன்றுகின்ற கொடிய கோபமுடைய யமனது காலத்தையும் தன் காலால் அறுத்துவிட்ட சிறந்தவனாகியபரமசிவன் கையில் எடுத் தாண்ட அந்தப் பெரிய பொன்மயமான ஒப்பற்ற வில்லை முறிக்கின்ற தன்மை, அந்த மாயவனுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு எளியதோ]

என்ன, அங்கலக்ஷணத்தாலும் ஆற்றற்றிறமையாலும் அவன் திருநெடுமாலே என்றதோ டமையால், பின்னும்,

என்னை யீன்றவ னிவ்வுலகி யாவையு மீன்ருன்
தன்னை யீன்றவற் கடிமைசெய் தவமஃ தையா
உன்னை யீன்றவெற் குறுபத முளதென வுரைத்தா
னின்ன தோன்றலே யவனிதற் கேதுவுண் டிறையோய்

[தலைவனே, என்னைப்பெற்ற வாயுபகவான், என்னை நோக்கி,'நீ, இவ்வுலகங்களையெல்லாம் படைத்த பிரமனைப்பெற்ற திருமாலுக்கு அடிமைசெய், அதுவே சிறந்த தவமாகும். ஐயா, அதுவே உன்னைப்பெற்ற எனக்கும் சிறந்த பதவியைக் கொடுக்கக்கூடியதாகும்'' என்ருன். இந்த இராமனே, அந்தத்திருமால், இதற்குவேறு ஒரு ஹேதுவும் இருக்கின்றது]

துன்பு தோன்றியபொழுதுடன் தோன்றுவ னெவர்க்கும்
முன்புதோன்றலையறிதற்குமுடிவென்னென் றியம்ப
அன்பு சான்றென வுரைத்தன னையவென் யாக்கை
என்பு தோன்றல வுருகின தெனிற்பிரி தெவனோ.

[அன்னவாறு என் தந்தை சொன்னபொழுது, அந்தப் புருஷோத்தமனை நான் அறிவதற்கு நிச்சயமான உபாயம் என்னவென்று நான்வினவ, என்தந்தை,''துன்பம்தோன்றியதும், அப் பரமபுருஷன் உடன் வந்து எதிர் தோன்றுவான்; மேலும் அவன்பால் உனக்குப் பக்தி பிறப்பதும் சாக்ஷியாகும்'', என்று சொன்னான். அதற்கேற்ப,ஐயனே இவனைக் கண்டமாத்திரத்தில், என் உடம்பானது எலும்புந் தோன்ருதபடி உருகிவிட்டது; என்ருல், வேறுஎதனை நாம் இனிச் சிந்திக்கவேண்டும்]

எனச் சாற்றினன். இராமனே அத்திருமால் என்று அனுமன் கூறுமிது உபசாரமன்று, உண்மை. அதற்கு இராமனது அங்கலக்ஷணங்களையும், தன் தந்தை சொன்ன சொற்களையும், தன் மனத்தையும், சாக்ஷியாகக் கூறினன். சுக்கிரீவன் உறுதிகொள்வதற்கு இவை போதாவெனின் வேறு யாது என்செயவல்லது. இன்பந்தோன்றிய காலத்துத் தோன்றுவார் எத்தனையோ பிறர். துன்பந் தோன்றுங்கால் உடன்தோன்றுவது எதுவோ அதுவே பரம்பொருள் என்று முடிவு கூறிய வாயுவின் வாய்ச்சொல் கோடிகோடி பெறும். துன்பமே எந்நாளும் தன்பால் தரித்திருத்தல் வேண்டுமெனப் பாண்டவரைப் பெற்ற குந்திதேவி கண்ணபிரானைக் கேட்டவரம் வீணன்று. துன்பமேயன்ரே என்றும்நம்முன் தனிப்பெருங் கடவுள்தன்னைக்கொணர்ந்து நிறுத்துந் தூதன். இந்த அடையாளத்தை அனுமனைக்கொண்டு சொல்வித்தது கம்பர் திறம். எனினும் சுக்கிரீவன் இத்திறத்தினைத் தேர்ந்துகொள்ளுந் தரத்தினன் அல்லன். இன்னும் ஐயமேகொண்டு முகங் கோட்டுகின்ருன். முன் வாமீகிநூலினுள், தானே தன்னுடைய ஏதமெல்லா மெடுத்துரைக்க, அதுகேட்ட இராமன், வாலியை வதைப்பதோர் வாக்கு வழங்குதலும், சுக்கிரீவன் மீண்டு மோர்முறை வாலியின் போராற்றலையும் பெருவலித் துந்துபியை அவன் அழித்ததையுங் கூறி, தான் வாலியை வெல்ல வல்ல ஆற்றலுடையவனாயினும் அண்ணன்முறை நோக்கி அமைந்திருந்தானென்று முன் இயம்பியதை யெல்லாம் வம்பாக்கும்படி, ''வாலியைப் போர்புரிந்து வெல்லுவது முடியாத காரியம் என்று எண்ணியே நான் இவ்விடத்தைவிட்டு அகலாதிருக்கின்றேன்'' என்று முன்னைய தன் வீரத்தை மறுக்கவும் உடன்பட்டு வெருவி நின்ருனென்றும், அதுகேட்ட இலக்குவன் ''ஐயா, எந்தக் காரியம் செய்தால் இராமர் வாலியை வதைசெய்ய வல்லவர்என்று கொள்வீர்'' எனவினவ, சுக்கிரீவன், ஆச்சாமரங்களைத் துளைப்பதையும் துந்துபியின் எலும்பைக் காலால் எறிவதையும் பரிக்ஷைகளாக அமைத்தானென்றும், இராமன் துந்துபியின் எலும்பை எற்றியபின்னரும் ஐயந்தெளியாத சுக்கிரீவன் ஆச்சாமரங்களையும் துளைக்கும்படி வேண்டவே இராமன் அதுவும் செய்து காட்டினனென்றும் கூறப்பட்டிருக்கின்றன. கம்பர் நூலில் பயிலவந்தும் சுக்கிரீவனுக்கு அந்தக் சந்தேகக் குணம் போகவில்லை. ஆதலின் அனுமன் இங்கு இத்துணைத் தத்துவம் அமைத்துச் சொன்னதத்தனையும் அவன்அரைச்செவி கொண்டே கேட்டனன். அதனைக் கண்டனன் அனுமன். சுக்கிரீவன் ஐயவர்களைத் தெளிவிக்க வல்ல வழி வேறு என்பதை உணர்ந்தான். ஆதலின்,

பிறிது மன்னவன் பெருவலி யாற்றலைப் பெரியோய்
அறிதி யென்னினுண் டுபாயமு மஃதரு மரங்கள்
நெறியினின் றனவேழினென் றுருவவிந்நெடியோன்
பொறிகொள்வெஞ்சரம்போவதுகாணெனப்புகன்ருன்.

[பெரியவனே, வேறுவகையிலும் அவ்விராமனது மிக்க பலத்தின் தன்மையை அறிய வேண்டுவாயாயின் அதற்கு ஒரு உபாயம் இருக்கின்றது. அவ்வுபாயம் எதுவென்ருல் இவ்வழியில் நிற்கின்ற எழு மராமரங்களில் ஒன்று (அல்லது ஒன்ருக) உருவும்படி பெரிய இவ்விராமன் அனல் கொண்ட அம்பு போவதேயாகும், என்று சொன்னான்]

கேட்டான் இதனைச் சுக்கிரீவன். துன்பு தோன்றியவுடன் தோன்றுவது கடவுள்; இவ்விராமன், நமக்குத் துன்புதோன்றியதும் தோன்றினன்; ஆகையால் இவன் கடவுள்; உலகத்தை ஈன்றவனை ஈன்ற கடவுளுக்கு வாலியை வீட்டுதல் ஒரு பொருளோ என்று அனுமன் அறைந்தபோது பிறக்காத ஊக்கம் சுக்கிரீவனுக்கு இதனைக் கேட்டவுடன் பிறந்தது—பிறக்கவே,

நன்று நன்றென நன்னெடுங் குன்றமு நாணுந்
தன்று ணைத்தனி மாருதி தோளிணை தழுவிச்
சென்று செம்மலைக் குறுகியான் செப்புவ துளதால்
ஒன்று னக்கென விராமனு முரைத்தியஃ தென்ருன்

[நன்று நன்று என்று வியந்து, தனக்குத் துணைவனான ஒப்பற்ற அனுமனுடைய நல்ல பெரிய மலைகளும்நாணும்படியான இரண்டுதோள்களையும் அணைத்துப் பின் போய் இராமனைஅடைந்து, ''உனக்குநான் சொல்லவேண்டியது ஒன்று இருக்கின்றது'' என்றுகூற, இராமனும், அதனைச் சொல்' என்ருன்]

ஏக வேண்டுமிந் நெறியென வினிதுகொண் டேகி
மாக நீண்டன குறுகின நிமிர்ந்தன மரங்கள்
ஆக வைந்தினோ டிரண்டினென் றுருவநின் னம்பு
போகவேயென்றன்மனத்திடர்போமெனப்புகன்
[ருன்

[அதுகேட்ட சுக்கிரீவன், ''இவ்வழி வரவேண்டும்' என்று இராம லக்ஷ்மணர்களை இனிது அழைத்துக் கொண்டு போய், ''ஆகாயத்தை அளாவி உயர்ந்தனவும், அவ்வாகாயமும் சிறிதென்று தோன்றும்படி வளர்ந்தனவும் ஆகிய மராமரங்கள் ஏழில் ஒன்று (அல்லது ஒன்ருக) உருவும்படி உன் அம்பு செல்லுமாயின், (நீ வாலியைக் கொல்ல வல்லவன் எனத்துணிந்து) எனது மனத்திலுள்ள துன்பமும் போகும், என்ருன்]

மறுவி லானது கூறலும் வானவர்க் கிறைவன்
முறுவல் செய்தவன் முன்னிய முயற்சியை முன்னி
யெறுழ்வ லித்தடந் தோள்களாற் சிலையைநா ணேற்றி
யறிவி னுலளப் பரியவற் றருகுசென் றணைந்தான்.

[குற்றமற்றவனாகிய சுக்கிரீவன் அதனைச் சொல்லவும், தேவர்களுக்குத் தலைவனான இராமன், சுக்கிரீவன் எண்ணிய முயற்சியைநினைத்து, சிரித்து,மிக்க வலிமையுடைய தனது பெரிய தோள்களால் வில்லை எடுத்து நாணேற்றி, அறிவினால் அளவிடுவதற்குஇயலாத அம்மரங்களின் அருகுசென்று சேர்ந்தான்]

வானவர்க்கிறைவன், வானரத்தின் சொற்கிணங்கி வழிநின்ற மரத்தினை எய்து துளைப்பதற்கு நேர்ந்த விதம் இது. வானவர்க் கிறைவன் என்று இராமனை இங்குக் கம்பர் குறிக்க நேர்ந்தது வீணிற்கன்று. கருணைக் கடலும், தான் ஆட்கொள்ள நினைத்தவர்தம் குற்றத்தினைக் கண்டுகொள்ளாதவனும், அடியார் உகந்ததை உகந்தவாறே புரிபவனும் ஆகிய அத்திருநெடுமாலே யல்லாக்கால் வேறு யாரும், இந்த அற்பச்சோதனைக்குத் தன்னை ஆளாக்கிக்கொள்ள உடன்படமாட்டார்; இதுகேட்க வெகுளியேவரும். சிறுமையே சொன்னனேனும் இச் சுக்கிரீவன் மறுவிலான் என்பதை இராமன் ஏற்றுக்கொண்டனன். அவன் முயற்சியையும் அதற்குத் தான் உடன்பட நிற்பதையும் நினைத்து இதுவும், தான் புரிவதற்கு இச்சித்த மாநுட நாடகத்தின் ஒரு கோலம் என்ன இவனுக்கு நகையே விளைந்தது. அன்றேல், இராமன் இப்பொழுது எதற்கும் சிரிக்கத்தகுந்தவோர் நிலையில்இலன்.

சிற்றன்னை சொன்னளென்று தன் அரசினைத் தம்பிக்கு அளித்தது அத்துணைப் பெரிய காரியமன்று. அதனில் அரசெனும் சுமையையே தன் தலைநின்று மாற்றினன். வானரமொன்றுசொல்லியதென்று, தன் வலிமையை நோக்குங்கால், பின்னர் இராமனேயியம்புவதுபோல் 'மூலப் பொத்தற் செத்த மரத்தினை'த் துளைக்க இணங்கிய இதுவே அவன் பெருந்தகைமையை உயர்த்துகின்றது. ஆகையாலன்ரே, ''மாராமர மேழ் தொளை எய்த எய்தவற்கு எய்[illegible]'' என்று கம்பரும் பாராட்டுகின்[illegible] [illegible] திறம்.

நட்புப்படலம் முற்றிற்று.

வர்த்தமானம்

மகிமையுள்ள வலம்புரி 2005 ரூபாய்:—வங்காளம் மைமன் சிங் ஜில்லாவில் நேத்ர கோனு ஊர்வாசியான அனந்தலால்மசுந்தார் என்ற தட்டார் கோமில்லா ஜில்லாவாசியும் இப்பொழுது கல்கத்தாவில் இருப்பவருமான ஒரு நேகை சாஸ்திரியிடமிருந்து ஒரு அருமையான சங்கை 2,005 ரூபாய் விலைகொடுத்து வாங்கியிருக்கின்ருர். டக்காவில் ஒருவியாபாரி இத்தகைய சங்கைப்பெற்றபாக்கியத்தால் பெருஞ்செல்வராகிவிட்டாராம். இந்தச் சங்கு அதே போன்றதாம். இந்தச் சங்கை வாங்குவதற்காக மேற்படி பொற்கொல்லர் தமது வீட்டையும் மனைவி மக்கள் நகைகளையும் விற்றுப் பணம்சேர்த்தாராம். சங்கால் தமக்குப் பெரிய அதிர்ஷ்டம் வருமென்ற அபார நம்பிக்கையால்தான் அவர் இவ்வாறு செய்திருக்கிருர்.

* * *

போன ஜன்மம்:—முன் ஜன்மம் உண்டென்ற கொள்கையை ஸர். ஆலிவர் லாட்ஜ என்ற அறிஞர் தமது அரிய ஆராய்ச்சியால் விளக்கி விட்டார். லண்டன் மானதசாஸ்திர நிபுணரான டாக்டர் ரோச்சாஸ் என்பவர் அதே கொள்கையை வற்பு[illegible] தன்னிடம் வைத்தியம் செய்த ஒரு மாதுக்குப் போன ஜன்மங்களின் நினைவு வரும்படி அவர் செய்தாராம். அவள் முன் ஜன்மங்களில் ஒரு பெண்ணாகவும், போர் வீரனாகவும், சிறுமியாகவும், கொலைகாரனாகவும், தோழியாகவும் இருந்திருக்கிருளாம். இவ்வாறு அவள் வாழ்ந்திருந்த காலத்தின் அளவு பல நூற்றுண்டுகளாம். அந்த மாது சொன்ன விவரங்களைக் குறித்துப் பழைய ஜனனமரணக் கணக்குகளைப் பார்த்ததில் கூடிய வரை அவை சரியாகவே யிருந்தனவாம். இதுபற்றி இன்னும் பலர் ஆராய்ச்சி செய்து வருகிருர்களாம்.

* * *

மூடரைக் கோல்ல வேண்டுமாம்:—மான் செஸ்டரில்பிரபலடாக்டராயுள்ளடாக்டர் ஹேட்என்பவரும் பிரிஸ்டலில் வைத்திய நிபுணராய் உள்ள டக்ரர் பெரி என்பவரும் உலகத்தில் மூடராயுள்ளவர்கள் இருந்தும் ஒரு பயனும்விளையாமையால், அவர்களை இலகுவான முறையிற் கொல்லுதலே சாலச் சிறந்ததென்று அபிப்பிராயம் கூறுகின்றனர்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை'' மருந்துகள்
''ஆல்மண்டைன்'' (டானிக்). ''பாலக்ஸ்'' பேதிமாத்திரை. ''ஸ்ப்ளிவரால்'' (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
ஆதாரணம்-பாக்கேட் I.D.L.C.I. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோகுதிற்குமணக்கு எண்ணெய் காஸ்டாலகஸ்
ஜ்வுரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் [illegible] செய்யவும்.]

199178
M 211, N28 LN

KALANILAYAM
REG. NO. M. 2324.

எல்லாவிதமான இன்ஷூரன்ஸ்களுக்கும்

ஜூபிட்டர் ஜெனரல்
இன்ஷூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

யோசனை கேளுங்கள்.

நெருப்பு, கப்பல், மோட்டார், தபால், ரயில்வே இவைகளுக்கும் மரணத்திறகும் இன்ஷியூரன்ஸ் எடுத்துக்கொள்ளுகிறோம்.

சென்னையிலேயே பாலிஸிகள் கொடுக்கப்பட்டுப் பணங்களும் பட்டுவாடா செய்யப்படும்.

1919-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்னையில் 1920-ம் வருஷம் முதல் வேலைசெய்து வருகிறது. பெரிய பாங்கிகளாலும் வியாபார ஸ்தாபனங்களாலும் மதிக்கப்பட்டது.

பூராவும் நம்பகமானது

(பெரிய முதலும் நிதியும் உடையது)

நேரிலாவது அல்லது நெ. 2547-க்கு போனிலாவது பேசவும்.

நாராயணதாஸ் கிர்தார்தாஸ்
(ஸ்தல மானேஜர்கள்)
நெ. 99, அரமனைக்காரன் தெரு,
சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஸு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:—
சேம்புதாஸ் தெரு,
சென்னை.

அல்லது

இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி

பழமரக் கன்றுகள்

முறைப்படி வளர்க்கப்படுவன

பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

DESAI & Co.,
17, Cross Road
Malleswaram
BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

“இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி”

இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)